பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க தனிப்பிரதி விலை அணு ஒன்று



வருட சந்தா முன் பணம் ...	ரூ 3—0
6 மாத சந்தா ,, ...	ரூ 1—12
வெளி நாட்டிற்கு ,, ...	ரூ 4—0

[வாரப்பதிப்பு]

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
☞ தனி விகிதமும் உண்டு.

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

மாலை 3 | ஈரோடு, பிரபவ-ஸு ஆனி மீ 26 உ (10—7—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 11

மின்சார ரசம்.

☞ மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பாலியர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபால் சார்ஜ் வேறு.

☞ மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது. மனிதர்களுக்கு வரும் ஆபத்தை யார் அறிவர்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒரு வேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த் தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து. கேட்லாக் இனம்.

விலாசம்:— **மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)** தந்திவிலாசம்:—"Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:- T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ் இங்கிலீஷ் மருந்து ஷாப் வியாபாரம், வடக்கு சித்திரை வீதி, மதுரை.

மலாய் நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— ஆர். இ. முகம்மது காசீம் & கம்பெனி, 'கிள்ளாங்,' பினாங், சிங்கப்பூர்.

இப்பழனியில் அநேக நற்சாட்சிகளும், தங்க மெடல்களும் பரிசுகளும் பெற்று தீராதென கைவிடப்பட்ட வியாதிகளை எல்லாம் சௌக்கியம் செய்த நமது முதல்தரமான தேவ அவுஷதங்கள்.

முதல் நெம்பர் தங்க பற்பம்.

தாது புஷ்டிக்கு நிகரற்றது!!!

அதிக வயதாலும், பலஹீனத்தாலும் பலவித துர் அப்பியாசத்தாலும் சோர்ந்து போனதும் இழந்து போனதுமான ஆண்மையைக் கெட்டிப்படுத்தி சப்த தாதுக்களுக்கும் வலுக்கொடுத்து இல்வாழ்க்கையில் அதிக இன்பத்தை உண்டுபண்ணி புத்திர சந்தானத்தை கொடுப்பதில் இதற்கு மிஞ்சின ஔஷதம் இல்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம். தங்க பற்பத்தை மகா வில்வாதி லேகியத்துடன் அனுபானமாகச் சேர்த்துச் சாப்பிட வேண்டும்.

முதல் நெம்பர் பற்பம் 50-நாள் விலை ரூபாய்	36—0—0	[தபால் சார்ஜ் பிரத்தியோகம்]
இரண்டாம் நெம்பர் பற்பம் 50 நாள் விலை	20—0—0	
மேற்படி 25-நாள் விலை	10—0—0	
அனுபானத்துக்கு மகாவில்வாதி லேகியம் 1 டின் ரூ.	10—0—0	

பாலாம்பிகை டிரேட் மார்க்

அசல் வெள்ளி பற்பம்

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்

நமது அசல் வெள்ளி பஸ்பம் நாட்பட்ட அஸ்தி வெட்டை நீரோடு இந்திரியம் உடைந்து விழுதல் அதில் ஈ, எறும்பு மொய்த்தல், சிணுக்கிரும் பல், தும்மல் விழுதல் வெட்டை வாய்வு இடுப்பில் வாய்வு தங்கியிருத்தல், தேகம் இளைத்து சதா காலம் ஜுரம்போல் சூடு தாங்கி யிருத்தல் கால் கை கண் முதலான இடங்களில் எரிச்சல் உண்டாகி தலைமாற்றி சுற்றல் இவைகள் கண்டிப்பாய் நிவிர்த்தியாகும் தேகத்திற்கு நல்ல பலத்தையும் தாது புஷ்டியையும், நல்ல இரத்த ஓட்டத்தையும் உண்டு பண்ணுவதில் தற்கு நிகரான மருந்துகள் கிடையாது இதை மதனகாமேஸ்வரி லேகிய அனுபானத்தில் சாப்பிடவேணடும். ஒரு மண்டலம் (48-நாள்) உபயோகிக்கக்கூடிய பஸ்பம் விலை ரூபாய் 15—8—0

ஒரு மண்டலம் (48-நாள்) உபயோகிக்கக்கூடிய பஸ்பம் விலை ரூபாய்	15—8—0	தபால் சார்ஜ் பிரத்தியேகம்
½ மண்டலம் (24 நாள் உபயோகிக்கக்கூடிய பற்பம விலை	7—8—0	
ஒரு மண்டலம் மதன காமேஸ்வரி லேகியம் ... ... விலை	8—0—0	

நீரிழிவுக்கு அப்ரேக்செந்தூரம்

வயது 40-க்கு மேல் வாழ்க்கைக்குள்ள கருவி காரணங்கள் சற்று இளகும். அப்போது மூத்திரப்பை பலன் அற்று ஜனனேந்திரியம் நீற்றுப்போய் இன்னும் பல காரணங்களால் மூத்திரப்பெருக்கு உண்டாகி சரீரம் மெலிந்து ஜீவனை விட்டுவிட வேண்டியிருக்கும் நிலைமையில் நீரிழிவு வியாதியினால் இறந்து போகிறார்கள் என்கிறார்கள். நீரழிவுக்கு நமது அப்ரேக்கு செந்தூரம் சாப்பிட்டால் அது குண்டிக்காய் மூத்திரப்பை முதலிய கருவிகளுக்குப் பலம் கொடுத்து ரட்சிப்பதுடன் நீரிழிவினால் எற்படும் சகல கோளாறுகளையும் நிவர்த்திசெய்து நல்ல மேனியை உண்டுபண்ணி சந்தோஷத்தில் வைத்து வளர்த்தும் அதிமதுரப்பால் ரஸாயனத்தில் சாப்பிட வேண்டும். 20 நாள் மருந்து [அனுபான ரஸாயனத்துடன்] விலை ரூ. 15-8

தாளகபற்பம்

நாட்பட்ட காசம், இருமல், க்ஷயம், ஈளை, கோழை, கஷ்ட சுவாசம் முதலிய ரோகங்களையும் வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தும்.

முதல் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை ரூ.	7—0—0	[தபால் செலவு வேறு]
2-ம் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை ரூ.	5—0—0	
லேகியம் கண்டங்கத்திரி அல்லது தூதுவளை ரசாயணம் 10-நாளைக்கு விலை ரூ.	3—8—0	

நாகபற்பம்

மூல சம்பந்தமான எவ்வித வியாதியாயிருந்தாலும் சரி, வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தும். ஆபரேஷன் வேண்டியதில்லை, பெருமுறை மருந்து.

முதல் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை ரூ.	10—0—0	தபால் செலவு வேறு
2-ம் நெமபர் பற்பம் புட்டி 1-க்கு விலை ரூ.	6—0—0	

நற்சாட்சி:—பழனி சற்குரு மகாதேவஸ்வாமிகள் சித்த ஆயுர்வேத பண்டிதர் ஸ்வாமிகள் தயார் செய்யும் தங்கம், தாம்பரம், வெள்ளி பவளம், முத்து, அயபற்ப செந்தூரங்கள் மிகவும் உயர்ந்த முறைகளால் தயார் செய்யப்படுகின்றன. சுமார் 1 வருஷ காலமாக என் பேத்திக்கு இருமல் வியாதி கண்டு கபத்தினாலும் சுவாசத்தினாலும் கஷ்டப்பட்டும, அநேக டாக்டர்களால் கைவிடப்பட்ட வியாதியை ஸ்வாமிகள் பிறர் ஆச்சரியப்படத்தக்க விதமாய் சௌக்கியம் செய்து விட்டார். இவருடைய அபார சக்தியை பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்வதில் மிகவும் சந்தோஷமுள்ளவனுயிருக்கிறேன். L கல்யாணராமய்யர் ரிடயர்டு தாசில்தார் அண்டு சிவகிரி திவான்.

அய்யா எனக்கு 4 வருஷகாலமாய் ஒரு நாளைக்கு 35 தரம் குறையாமல் மூத்திரம் இறங்குவதும் மலம் தீய்ந்து ரெத்தத்துடன் இரண்டு மூன்று தினத்துக்கு ஒரு தரம் இறங்குவதும், தேக அசதியும், தலை மயக்கமும் இன்னும் அநேக வியாதியுடன் கஷ்டப்பட்டு இம் மலாய் நாட்டில் அநேக மருந்து சாப்பிட்டும்! ஊசி மூலியமாக தேகத்தில் மருந்து செலுத்தியும், சவுகரியப்படாமல் கஷ்டப்பட்டு இருக்கையில், சென்னையில் பிரசுரித்து வெளிவரும் (தமிழ் நாடு பத்திரிகையில்) மேற்படி சுவாமியின் விளம்பரத்தைப் பார்த்து கடிதத்தின் மூலம் தெரிவித்தனன். எழையின்மீதில் கிருபையுடன் தாங்கள் அனுப்பிய 24 நாள் தங்க பற்பமும், 24 நாள் நாகபற்பமும், 24 நாள் அப்ரேக் செந்தூரமும் வகைக்கு 1 அரிசியிடையாகச் சேர்த்து காலை மாலை இருவேளையும் மேற்படி பற்பங்களுக்கு அனுபானமாக அனுப்பப்பட்ட மஹா வில்வாதி லேகியத்தில் வைத்துச் சாப்பிட்டு, தங்களால் அனுப்பப்பட்ட சந்தனாதி தைலத்தில் ஸ்நானம் செய்து வந்தேன் எனக்கு மேற்கண்ட வியாதி முற்றிலும் சுகம். மேற்படி சுவாமியுடைய ஔஷதங்கள் சாப்பிடுவதற்கு, குமட்டல், வாந்தி முதலியன இல்லை. ருசியுடன் கூடியது. பத்தியம் தவறினால் ஒரு தொந்திரவும் செய்யாது. எந்த தேசத்திலிருந்தும் தருவித்துச் சாப்பிடலாம். அயல் நாட்டு வியாதியஸ்தரின் பேரில் அவர் வைத்துள்ள அன்பு நேரில் தாங்களே தெரிந்து கொள்ளக்கூடும்! மேற்படி சுவாமிக்கு கடவுள் நீண்ட ஆயுளைக்கொடுப்பாராக! அ. ஆறுமுகம் நெ, 11 கேப்பிங்ரோடு கோலாலம்பூர், மலாய்நாடு.

சற்குரு மகாதேவஸ்வாமிகள் மகா ஆபத்தான வியாதிகளை சொஸ்தப்படுத்துவதில் திறமை வாய்ந்தவர் என்று நற்சாட்சி கூறுவேன். அவர் அளவு கடந்த சமத்துவம் வாய்ந்தவர் வியாதியஸ்தர்களுக்கு ஆச்சரியப்படத்தக்க சொஸ்தம் கொடுப்பவர், சிகிச்சை செய்ய வேண்டியவர்களுக்கு வேண்டிய சகல நல்ல குணாதிசயங்களும், அடையப்பெற்றவர். அநேக காலமாக ஸ்வாச காசத்தில் கஷ்டப்பட்டேன். வியாதியின் குறி தென்படும்போது உயிர் துறந்து மறு உலகம் போவேன்போல் உட்கார்ந்திருந்தேன் நான் இறக்கப்பட்டுப்போவேன் என்ற கடைசி காலத்தில் கடவுள் இந்த சுவாமிகளிடம் எனனைச்சேர்த்தார். குணப்படுத்த நிரம்பப் பணம் வேண்டிக் கொண்டவராயிருந்தாலும் சம்மதித்து நீண்டகால அவதியை சொஸ்தம் செய்தார். தாளக பற்பத்தை கடுக்காய் ரசாயனத்தில் கொடுக்க அது தேவையான குணத்தைக் கொடுத்தது. நான் ஆச்சரியப் படும்படி 1 மண்டலத்தில் குணம் வாய்ந்தது. நான் குணம் பெற்று இப்போது அநேக வருஷம் உலகில வாழ இருக்கிறேன்; கஷ்டப்படும் அநேகருக்கு தேவையான சமயம் உதவியாயிருக்க அவர் ஆசிர்வதிக்கப்பட வேண்டுமாக கடவுளை வணங்குவேன். (Sd.) K. V. வேங்கடேஸ்வர அய்யர்,

பழனி, 19-2-1925 ஜவுளி வியாபாரம்

மலாய் நாட்டிலுள்ளவர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும். விவரமான கேட்லாக்குக்கு இன்றே எழுதவும்.

ஸ்ரீமத் சற்குரு மஹாதேவ சுவாமிகள்,

சதானந்த மெடிகல் ஹால் பழனி, (தென்னிந்தியா)

மலாய் நாட்டிற்கு நமது ஏஜண்டு, M E. நாயுடு அவர்கள் டிரஸ்ஸர், 86 டேலுக், கோடங்குரோட், (கிளாங்கு,) KLANG F. M. S.

பார்ப்பனரல்லாதார் இளைஞர் மகாநாடு கோயமுத்தூர்

வரவேற்புக்கழகத் தலைவர் உயர் திருவாளர் C. V. V. சுப்பைய செட்டியார் அவர்களின் வரவேற்பு பிரசங்கம்.

சகோதரிகளே சகோதரர்களே!

இம் மகாநாட்டின் வரவேற்புத் தலைமை பதவியான பெரும் பொறுப்பை எனக்களித்திருக்கிறீர்கள். உங்களின் கட்டளையை தடுக்க முடியாதவனாகவே இப் பதவியை யேற்றுள்ள எனக்கு உங்களின் பூரண ஆதரவுகள் உற்றதுணையாக இருப்பதாக.

நமது நிலைமையைப்பற்றியும் அத்துமீரிய பார்ப்பனீயக் கொடுமையைப்பற்றியும் ஆலோசிக்க இங்கு கூடியிருக்கிறோம். இவ்விரண்டுதின மகாநாடுகளிலும் உங்களுக்கு வரவேற்பு கழகத்தால் செய்துகொடுக்க வேண்டிய சௌகரியங்களில் ஏற்படும் குறைகளை மன்னிப்பீர்களாக!

நமது கடமை

இளைஞர்களாகிய நமக்கு இதுவரையில் சமூக சீர்திருத்த ஊழியமொன்றேயாகும் ஆனால் தர்ச்சமையம அரசியல் துறையிலும் நாம் செல்லவேண்டிய நிலைக்கு தலைவர்கள் நம்மை கொண்டுவந்து விட்டார்கள். உலகில் எந்த தேசமும், தனது விடுதலையை பத்திரிகை, கண்டனக்கூட்டம், பகட்டான பேச்சு, சர்க்கார் உத்தியோகங்கள், பொது ஜன சபைகள் இவைகளின் உதவியால் அடைந்ததாக எந்த சரித்திரமும் சொல்லவில்லை. ஆனால் உண்மையாய் விடுதலையை அடைந்த ஒவ்வொரு தேசங்களும் நாட்டின் நெருக்கடியான காலங்களிலெல்லாம் இளைஞர்களின் தியாகத்தின் பயனாகவே பெரும் மாறுதல்களை அடைந்திருக்கின்றன. ருஷ்யா, ஜப்பான், சைனா, துருக்கி, அயர்லாந்து, போன்ற தேசங்களே இதற்கு தக்க சான்றாகும். எந்த ஒரு கூட்டம் சுயநலமின்றி ஜனசமூக நன்மைக்கு வேலை செய்து வருகின்றனவோ, அக் கூட்டத்தின் பெயர், அரசியலென்றும், சமூகவியலென்றும், சீர்திருத்த இயல் என்றும் அவ்வக் காலங்களில் அழைக்கப்படுகின்றன. அக் கடனை ஆற்றும் பெறும் பொறுப்போ அந்நாட்டு இளைஞர்களையே சார்ந்ததாகும்.

நமது கட்சியார்.

பார்ப்பனரல்லாதாரான நமதியக்கமானது பத்தாண்டுகட்கு முன்னர் கொங்கு நாட்டின் சிகரமான இக்கோவையில் தான் முதன்முதல் உர்ப்பத்தியாயின வென்பதை ஞாபகமூட்டுகிறேன். இதன் அடிப்படையான, தத்துவத்தை, சமூக சீர்திருத்தம். அரசியல் முற்போக்கு என இருகூறாக பிரிக்கலாம். இவ்விரு கூறுகட்கும் உயிருக்கும், உடலுக்கும் உள்ள வேற்றுமையே யன்றி வேறன்று. காங்கிரசினின்று வெளிவந்தவர்களே நமது அக்காலத்திய தலைவர்களும் தங்களின் நீண்டநாள் அனுபவங்களை யொட்டி சமூக அபிவிருத்தி யேற்பட்டாலன்றி அரசியல் முற்போக்கென்பது முடியாத விஷயம் என்பதையுணர்ந்து அத்தத்துவத்தின் மீதே நமது இயக்க கோட்டையை கட்டினார்கள். அதன் பலனாகவே நாம் அக்காலத்திய சர்க்காரை நடத்தும் பொருப்பைப் பெற்றிருந்தோம். மாகாண இயக்கமாகிய நமது இயக்கம் மற்ற மாகாணங்கட்கும் பரவ ஆரம்பித்தன. அகில இந்திய இயக்கமாகவும் நாம் ஆகவேண்டிய நிலையிலிருந்த காலத்தில் தலைவர்கள் பல காரணங்களால் அரசியல் ஒன்றையே கருதினார்கள். அதன் பலனாக தேர்தலில் மிக குறுகிய வெற்றி நமக்கு கிடைத்தது. வன்மை கொண்ட ஆறுவருட ஆக்ஷியானது நமது எதிரிகளின் சூக்ஷியால் தளர்ச்சியுற்று விட்டது.

இயக்கத்திற்கு புத்துயிர்.

அக் காலத்தில் நமது கட்சியின் பெயரைச் சொல்லவும், நமதில்லங்களில் தாங்கள் வருவது கூட பாவம் என்றும் மனம் புழுங்கியிருந்த பார்ப்பனரல்லாதார் மிக அதிகமானார்கள். நாம் இறந்தே விட்டதாக பார்ப்பனர்கள் கூறியதை தேசம் நம்பியது. இப்பேர்ப்பட்ட காலத்தில் தான் நமது குடியரசு அதிபர் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் நமக்குத் துணைவராக தோன்றினார். இன்று நாட்டில் நமக்கேதாவது யோக்கியதை இருக்கிறதென்று யாராவது எண்ணினால் அது திரு நாயக்கர் அவர்களாலேயே உண்டானதாகும். அப்பெரியாரின் இடைவிடா உழைப்பால் தேசத்தில் தேர்தலில் தோற்ற கட்சியினரான நமது மதுரை மகாநாட்டிற்கு ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தார்கள். நமது தலைவர்களும் தங்கள் தவறுதல்களை உணர்ந்து மீண்டும் சமூகவியலை எடுத்து கடன்ஆற்றுவதென்றும் அதேவேலையாக இருக்கப்போவதாகவும் கூறினார்கள். பார்ப்பன புரோகித பகிஷ்கார தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. தனது சீர்திருத்த திட்டம் தன் காலத்திலேயே ஜனசமூகம் அனுஷ்டிப்பதைப் பார்க்கும் பெருமை எந்த சீர்திருத்தக்காரரும் பெற்றதில்லை. அவர்கள் மடிந்தபின்பே அவர்களின் லெட்சியம் நாட்டாரால் கொண்டாடப்படும். ஆனால் ஆச்சர்ய புருடரான நமது நாயக்கர் அவர்களின் திட்டமோ அவர் காலத்திலேயே ஜனசமூகத்தால் பெரிதும் ஆதரிக்கப்பட்டு வருகிறது. இதற்கு அப் பெருங்கிழவரின் தளராத உழைப்பும், பிடிவாதமும், ஆண்மையும், இளைஞர்கட்கு அவரிடம் உள்ள செல்வாக்குமே காரணமாகும். அத்தலைவர் நீடூழி வாழ்க.

ஆச்சர்யமான முன்னேற்றம்

சட்டசபையில் சொற்பமாய் உள்ள நமது கட்சியை அப்பெரியார் ஆயுதமாகக்கொண்டு பார்ப்பன அரசியல் வாதிகளின் துரோக சிந்தனைகளை ஒருநொடியில் உலகமுழுதும் வெளிப்படுத்தினார். மந்திரி கட்சியை எதிர்க்கக்கூடாதென்ற தலைவர்கள் அக்காலத்திலும் இல்லாமலில்லை. ஏதோ நற்காலமாய் மந்திரி கட்சியை எதிர்த்தோம். பார்ப்பன வேஷயம் வெளியாயின. ஆனால் மந்திரிசபை கலைக்கப்பட்டு புது தேர்தல் நடைபெறவில்லை, அதற்கு காரணம் நாமே யாவோம். இந்நான்கு மாத காலமாய் மதுரை மஹாநாட்டு தீர்மானங்களை சென்னை நிர்வாக கமிட்டி தீர்மானங்களையும் நம் தலைவர்கள் நிறைவேற்ற பாடுபட்டுழைத்து வந்திருந்தால் இன்று மயிலை ஐயங்காரின் ஆட்டிவைக்கும் பொம்மையாய் உள்ள மகாண சர்க்காரும், மாகாண சட்டசபையும் முன்பே மாறுதலை அடைந்திருக்கும். சட்ட சபைகளை கலைக்காதது கவர்னர் பெருமானின் குற்றமன்று. நமது குற்றமேயாகும். இன்றும் தலைவர்கள் நினைத்து அதன்வழி நின்றுழைத்தால் சட்டசபையை கலைக்க முடியாமல் போகாது.

காங்கிரஸ்.

இதற்கு நல்லயோக்கியதை ஒருகாலத்தில் இருந்தது: அந்த யோக்கியதைக்கு காரணமாக இருந்த நிர்மாண திட்டங்களை அது நழுவ விட்டுவிட்டது. அதிலிருந்த உண்மை தலைவர்கள் பிரிந்துவிட்டார்கள். இன்று உயிரற்ற பிணமாக அது கிடக்கிறது. அதற்கு செல்வாக்கிருப்பதாக பார்ப்பன பத்திரிகைகள் ஆர்பாட்டம் செய்துவருகிறது. இதைக்கண்டு நமது பெரியார்களில் சிலர் திகைத்து காங்கிரஸ் பிரவேச பல்லவி பாடுகிறார்கள். அக் கட்சி அதனுட்கட்சி, அதன் தலைவர்கள், இவைகளைப் பற்றி மீண்டும் இங்கு கூறவேண்டியதில்லை. அவ்வளவு தூரம் நாடு சிரித்துக்கிடக்கிறது. அதற்கு போகவேண்டுமென்பது நமது கட்சியின் புற்றுயிரை போக்க எண்ணுவதாகும். அவ்வுயிரை போக்காதீர்கள். அவாது சமூகத்தைப்பற்றி ஐயங்காருக்குள்ள கவலை உங்கட்கு இருந்தால் சத்தம்போடாமல் நம் கட்சியில் இருந்துகொண்டோ, விலகியோ, அவர்களுடன் கூடிக் குலாவுங்கள். ஆனால் கட்சியை குலைத்து விடாதீர்கள் என்றே அப்பிரவேசக்காரர்

(இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

கோவை மகாநாட்டின்

வரவேற்புத் தலைவர் பிரசங்கம்.

சகோதரப் பிரதிநிதிகளே,

சகோதரிகளே! சகோதரர்களே!!

உபசரணைக் கழகத்தின் பெயராலும் அதன் சார்பாலும் இந்தப்பார்பனரல்லாதார் விசேஷ மகாநாட்டிற்கு தங்களெல்லோரையும் எனது மனப்பூர்வமான அன்போடு வரவேற்கின்றேன்.

பிராமணரல்லாதார் முதல் மகாநாடு.

பிராமணரல்லாதார் மகாநாடு முதல் முதலில் எங்கள் நகரில் நடைபெற்றதென்னும் விஷயத்தைப்பெருமையோடும் சந்தோஷத்தோடும் இது சமயம் உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். நல்லெண்ணத்தோடும் துர் எண்ணத்தோடும் எழுந்த கண்டனங்களுக்கெல்லாம் தப்பி இவ்வளவு காலமும் பிழைத்து வந்திருக்கிறோம். நமது இயக்கமானது சரியா இல்லையா என்பதைப்பற்றிச் சமாதானம் சொல்லவேண்டிய காலம் மீறிப்போய் விட்டது.

யார் ஜாதிபேதப் பாராட்டுபவர்?

எந்தக்காலத்திலும் நமது விரோதிகள் நம்மை சாதிபேத வாதிகள் எனக் குறை கூறி வருகின்றனர். நமது இயக்கம் சமூகாபிமானம் சிறிதுமில்லாததோடு அதனை அழித்தொழிக்க முயல்வதில் கண்ணுங்கருத்துமாய் இருக்கிறதென்பதை யான் மிகவும் தைரியமாய் வற்புறுத்திக் கூறுகிறேன். அதாவது.

நமது பார்ப்பனரல்லாதார் இயக்கமானது நம் தாய் நாட்டில் பன்னூறு வருஷங்களாக நிலைத்துத் தழைத்து வரும் ஜாதிபேதத்தை நசுக்கித் தொலைக்க விளைந்த கிளர்ச்சியேயாகும். புரோகித வகுப்பினரானவரே பேதங்கொண்ட குறுகிய மனத்தினர் என்பதற்கு சாக்ஷி வேறு வேண்டுவதில்லை. எல்லாதேச அரசியற் சரித்திரமும் மதச் சரித்திரமும் சந்தேகமென்பது சிறிதுமின்றி இதனை நிலைபெற்ற உண்மையென்று உறுதிப்படுத்தியிருக்கின்றன. இந்தியாவின் புரோகித வகுப்பினராகிய பார்ப்பனர்கள் இந்த உலகம் ஒப்புக்கொண்ட உண்மைக்கு விலக்காகமாட்டார்கள். இவர்கள ஜாதி வேற்றுமையே உருவாக வந்தவர்கள. அவ்வேற்றுமைக்கு ஆதாரமானவற்றை அணிந்து போற்றுவார்கள. சமூக வாழ்க்கையில் கொடூரமான வழக்கங்களை புகுத்தியவர்கள் தங்கள் வகுப்பினரல்லாதாரைத் தள்ளி வைக்கும் தன்மையினர். ஆங்கிலேயர்களே இந்தப்பார்ப்பனரின் குணுதிசயங்களைப் பார்த்து இவர்கள் கொடூரமான வழக்கங்களை அனுசரித்து மற்றவரைத் தள்ளிவைத்துத் தனித்து வாழும் ஓர் சிறு ஜாதியார் என்று குறிப்பிட்டுள்ளார்கள். இந்தக்கொடூர வழக்கத்தை அனுசரித்து தனித்து வாழும் [illegible]ரபினர் நம்மை பார்த்து ஜாதிபேத வாதி[illegible] எனக் குறை கூறுவது விதியின் கொடுமையேயாகும். பார்ப்பனரல்லாதாரைப்பற்றி பம்பாயில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் திருவாளர் ஜயக்கர் பேசியபோது ‘அவர்கள் (பார்ப்பனரல்லாதார்) கோருவதெலலாம் அறிவு வளர்ச்சியில் சமத்துவமும் ஒருவரோடொருவர் கலந்திருக்குதலுமேயாகும். அந்தக் கோரிக்கையானது அரசியல் அனுபவத்தாலாவது, உத்தியோகங்களையும், ஆதிக்கத்தையும தக்கவாறு அமைத்துக்கொள்ளுவதினாலாவது கைகூடாது. ஆனால் எவ்வெவ்விடங்களில் முடியுமோ அவ்வவ்விடங்களில் அறிவு வளர்ச்சியின் சம்பந்தத்தினோடு அவர்கள் கோரிக்கையைத் தைரியமாயும் விட்டுக்கொடாமலும் சேர்த்துக்கொள்வதினாலேயே கைகூடும்” என்று குறிப்பிட்டிருக்கிறார். மைலாப்பூரில் அவதாரம் செய்திருக்கும் ஒற்றுமைக்கடவுள் ஜாதீய ஒழுக்கத்தைப்பற்றியும் ஒற்றுமைப்பற்றியும் பேசிக்கொண்டிருப்பதை விட்டு விட்டு சமதா கொள்கையின் உண்மையினை அனுசரிப்பாரேயாகில் அவர்களது (பார்ப்பனரது) நிலைமையின் ஊழல் நன்கு வெளிப்பட்டுப்போகும்.

பார்ப்பனரல்லாதார் இயக்கமும் சுயமரியாதையும்.

இராஜீய மாறுதல்கள் மிகவும் தீவிரமாக கவனிக்கப்பட்டு வந்த காலத்தில் இந்தப்பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் பிறந்தது: ஆதலால் அது இப்போது இருக்கும் நிலைமைக்கு வந்தது தற்செயலன்று. ஆதிக்கமும் பொருப்பும் இந்தியர்கைக்கு மாறக்கூடும் என்னும் எண்ணத்தால் பல வேறு சமூகங்களின் தலைவர்கள் “இந்த ஆதிக்கமும் பொறுப்பும் யார் கைக்குப் போகும்?!” என்று மிகவும் ஆழ்ந்து யோசிக்கலானார் என்றால் அது ஓர் ஆச்சரியமன்று. ராஜீய சீர்திருத்தங்களுக்கு முன் அரசியல் ஆதிக்கத்தையும் அதனை நிலைநிறுத்த உயர்ந்த உத்தியோகங்களையும் ஒரு சிறு வகுப்பினர் தமக்குச் சுதந்தரமாகக்கொண்டு அனுபவித்து வந்தார்கள். இதற்குக் காரணங் கண்டுபிடிப்பது கஷ்டமன்று. பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைப் பிறப்பித்தவர்களாகிய ஆன்றோர்கள் குறிப்பிட்டவாறு பாரம் பரியமாக பூர்வத்திலிருந்து நிலைத்துவரும் கொள்ளுகைகளும் இந்து சமூகத்தில் மிகவும் உயர்ந்தவர்களென்றும் பரிசுத்தமானவர்களென்றும் கருதப்படும் பார்ப்பனரது ஸ்தானமும், தாங்கள் தான் கடவுளையடைவதற்கு இடை நின்று துணை செய்யக்கடவுளால் எற்படுத்தப் பட்ட தெய்வீகத் தரகர்கள் என்றும் தாங்கள் இடை நின்று துணை செய்யாவிடிலும் ஆசீர்வாதம் செய்யாவிடிலும் ஆன்மா கடைத்தேறுதல இல்லையென்றும் நூல்கள் பலவற்றில் எழுதியும் உபதேசவழியாகப் போதித்தும் உண்டாக்கிய நம்பிக்கையும், செற்றி வியர்வைநிலத்தில் சொட்ட அரும்பாடுபடும் அவசியம் அவர்களுக்கில்லாமையும்; ஆகிய இவையெல்லாம் கூடி பூர்வத்தில் நடந்து வந்தபடியே மற்ற ஜாதியாரைக்காட்டிலும் முன்னிலும் அதிகமாகவும், நினைத்தகாரியம் முன்னிலும் விசேஷமாகப் பலிக்கவும் ஆங்கில அரசாட்சியால் வந்த புதிய முறைக்குத்தக்கவாறு தங்களை மாற்றிக்கொள்ள உதவி செய்தன. இந்தச்சிறு வகுப்பினர் கையில் அரசியல் ஆதிக்கம் பின்னும் அதிகமாகப் போய்விடுமோ என்று முறையாக எழுந்த பயத்தால் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் தலைவர்கள் இந்தப் புதிய இயக்கத்திற்கு இராஜீயமாகவும் ஜன சமூகமாகவும் ஓர் புதிய ஒளியைத் தருவாராயினர். திருவாளர் கே. நடராஜன் என்பவர் ஜன சமூக சீர்திருத்த விஷயமாக ஒரு சமயம் பேசியபொழுது “இந்தியர்கள் சமூக சீர்திருத்தத்தில் தங்களுக்கேற்பட்ட கடமையொன்றிருக்கிறதென்று உணரவேண்டுமென்றால். பல வருஷங்களுக்கு முன் மிஸ்டர் ஆலன் ஹியூம் என்பவர் சொல்லிய வண்ணம் அவர்களுக்குள் சுயமரியாதை உணர்ச்சியைத் தட்டி எழுப்பவேண்டு” மென்று சொல்லியிருக்கிறார். இக்காரணத்தினாலேயே மிஸ்டர் ஹியூம் என்பவரும் மற்றைய தலைவர்களும் இந்தியர்களை அவர்களது உணர்ச்சியற்ற தன்மையிலிருந்து எழுப்புவதற்கு தகுதியான வழி யெனக்கருதி காங்கிரஸ் மகா நாட்டை ராஜீயக்கருவியாக்கினார்கள்.

முரண்.

எனவே பார்ப்பனரல்லாதார் இயக்கமானது பாமர ஜனங்களின் சுயமரியாதையை எழுப்பும் முயற்சியில் இராஜீய வழியில் சார்ந்திருக்கவேண்டியது விலக்கவொண்ணாததும் இன்றியமையாததுமாயிருக்கிறது.

உலகத்தில் ஒருவரது நிலைமை பிறப்பினால் நிட்டப்படுத்தப்படுவது என்னும் கொலைபாதகக் கொடுஞ் சட்டத்தை நிர்மூலமாக்க வேண்டுமென்பது இந்தப்பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் முதன்மையான முக்கிய நோக்கமாகும். இந்த இயக்கத்தில் சேர்வதற்கு ஒருவர் பிறப்பினால் பார்ப்பனரல்லாதாராயிருக்க வேண்டுமென்று இருக்கும் விதி இந்தக் கொள்கைக்குப் பொருத்தமுடையதாயிருக்குமா? நாம் எந்தச் சமூக விதியைக் கண்டனம் செய்கின்றோமோ அதையே நுழைக்க முயலுகின்றோமல்லவா? இந்த விஷயத்தைத் தாங்கள் மிகவும் கவனிக்க வேண்டும். ஆகையால் சிறிது காலத்திற்கு முன்னர் நமது கொள்கையை ஒப்புக்கொள்ளும் பார்ப்பனரோ பார்ப்பனர் அல்லாதாரோ, யாராயிருந்தாலும் சரி நாம் அவரை இருகையாலும் வரவேற்றுச் சேர்த்துக்கொள்ள வேண்டு மென்று சமீபத்தில் பிரேரேபிக்கப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக இந்தப் பிரேரேபணை ஒப்புக்கொள்ளப்பட வில்லை ஒரு வேளை மனோ உணர்ச்சியே இந்த எண்ணத்திற்கு மாறாக நின்றதுபோலும், ஆயினும் உள்ளத்துணர்ச்சிக்கும் போதுமான மதிப்புக் கொடுக்கவேண்டுமாதலால் இந்த எண்ணம் வருத்தத்தோடு விட்டொழிக்கப் பட்டது.

மாறுதலுக்கவசியம் வேண்டும்,

சென்ற சில மாதங்களாக புதுப்புது அபிப்பிராயங்கள் பல விடங்களிலும் வெளியிடப்பட்டு வருவதே மாறுதலுக்கு அவசியமும் அவசரமும் இருப்பதாகப் புலனாகின்றது. அவ்வபிப்பிராயங்களுள் ஒன்றைப் பற்றி நுணுக்கமாக நாம் கவனிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அதாவது நம்மினும் பெரிய, இயக்கமாகிய காங்கிரஸ் மஹாநாட்டில் நாம் சேரவேண்டுமென்பதே. சென்ற சில வாரங்களாக இந்தக் கொள்கைக்கு அனுசரணையாகவும் மாறாகவும் பற்பல அபிப்பிராயங்கள் வெளி வந்துள்ளன. இவ்விஷயம் இம் மகாநாட்டில் நமது நுணுக்கமான கவனத்தைக் கவருமாதலால் இது சம்மந்தமாக சிறிது நேரம் பேச அனுமதி கொடுக்குமாறு பிரார்த்திக்கின்றோம்

பரந்த நோக்கம் வேண்டும்.

பார்ப்பனரல்லாதார் இயக்கமானது நமது மாகாணத்தைப்பற்றிய விசேஷ விஷயங்களிலேயே அநேகமாக நின்றுபோயிருக்கிறது. இந்த அபார வேலை நமது கவனத்தை நமது வீட்டளவில் நிலைப்படுத்திவிட்டது, இன்னும் விசாலமான இராஜீயத் துறையினின்றும் நம்மைப்பிரித்துவிட்டது. இந்த விசாலத் துறையினில் கொள்ளவேண்டிய முயற்சியில் ஊக்கக் குறைவும், [illegible] ன்கு உணராத குறைவும் சென்ற மூன்று இந்திய [அசம்பளி] சட்ட சபைத் தேர்தலைகாம் [illegible]க்காமல்விட்டதிலேயே வெளியாகிவிட்டன

(இதன் தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

கோவையில் நமது மாகாண

பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

காங்கிரஸ்காரர்கள் வந்து சேர வழி திறக்கப்பட்டுவிட்டது.

ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளும், விசிட்டர்களும்.

சுயமரியாதை • உதயமாயிற்றென்றே சொல்லலாம்.

பார்ப்பன சூழ்ச்சியால் பிளவுபட்டிருந்த ஒரு தாயின் மக்கள் உண்மை உணர்ந்து ஒன்று கூடல்.

பிரதிநிதிகட்கு உள்ளே இடமின்றி வெளியே நின்றார்கள்

கோவை மகா நாட்டு விபரங்களைப்பற்றி, அங்கு நடந்த நடவடிக்கைகளையும், மக்களுக்கு ஏற்பட்டிருந்த உற்சாகத்தையும், மற்றும் அது சம்பந்தமான பெருமைகளையும், எடுத்துச் சொல்வதென்றால் அது சாதாரணமாய் முடியக்கூடிய காரியமல்ல. கண்ணில் பார்த்தவர்கள் தான் அதை அனுபவிக்கமுடியும். மகா நாட்டின் தன்மையைப் பற்றி சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் இப்பேர்ப்பட்ட காட்சியையும் உண்மை உபதேசங்களையும் காணவும் அறியவும் சவுகரியப்படாமல் போன நம்முடைய பார்ப்பனரல்லாத சகோதரர்களைக் குறித்து பரிதாபப்படவேண்டியதைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை. பார்ப்பனரல்லாதார் இயக்கமென்பது நமது நாட்டில் எவ்வளவு பெருமையோடு எவ்வளவு உண்மையான தத்துவத்தோடு எவ்வளவு பெரிய சமூகத்தின் பிரதிநிதித்துவத்தோடு நாட்டின் நலனைக்கருதி விளங்குகிறது என்பதும், அதனால் நமது மக்களுக்கும் நமது நாட்டுக்கும் எவ்வளவு நன்மைகள் ஏற்பட்டு இருக்கிறதென்பதும், அல்லாமல் நம்மீது பழி சுமத்தி தாழ்த்தப்பட்டு எந்தெந்த காலத்திற்கும் தலைதூக்க முடியாதபடி சூழ்ச்சிகள் செய்து அழுத்திவைத்துக்கொண்டு அன்னிய அரசாங்கத்திற்கும் நம்மையும் நமது நாட்டையும் காட்டிக்கொடுத்து நமது மானத்தையும் ரெத்தத்தையும் அழித்து உறிஞ்சும்படி செய்து வாழும் ஒரு வஞ்சனெஞ்ச வகுப்பினரின் தந்திரத்தை எவ்வளவு தூரம் நமது மக்கள் உணரநேர்ந்தது என்பதும், எவ்வித புதுணர்ச்சி பெற நேர்ந்தது என்பதும் எவ்வளவு சாதாரண அறிவுள்ள மனமும் அறிந்திருக்கக்கூடும்.

மகா நாட்டின் நடவடிக்கைகளும், தீர்மானங்களும், வாதப்பிரதி வாதங்களும், பயபக்தியோடும் பரிசுத்தமான மனதுடனும் பெரும் பொறுப்புடனும் உண்மையான கவலையுடனும் நடைபெற்றதே யல்லாமல் காங்கிரஸ் போன்ற நாட்டிற்குக் கேட்டை விளைவிக்கும் பார்ப்பன ஸ்தாபனங்களில் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கும், பிறரை ஏமாற்றுவதற்கும் பொறுப்பற்ற தன்மையுடனும், வேடிக்கை போலவும் ஒரு சிறுநேரமாவது கழியவேயில்லை. மகாநாட்டை நடத்துவதற்கு ஏற்றுக்கொண்ட கனவான்கள் கோவை மகா நாட்டின்மூலம் நமது நாட்டிற்கும் நமது நாட்டிலுள்ள சமூகங்களுக்கும் சுயமரியாதையும் சுதந்திரமும் ஏற்படுத்துவதற்கான வழிகளை நமது சமூக மக்கள் எல்லோரும் ஒற்றுமைப்பட்டு உழைக்கத்தகுந்த மாதிரியில் ஏதாவது ஒரு திட்டத்தை கண்டுபிடிக்கவேண்டுமென்னும் விஷயத்தில் எடுத்துக் கொண்ட கவலையை இவ்வளவு அவ்வளவு என்று வாயினால் சொல்ல முடியாது. மகா நாட்டிற்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளும் உழைப்பாளர்களும் தலைவர்களும் ஒன்று சேர்ந்து உழைக்கவேண்டுமென்னும் விஷயத்தில் எடுத்துக்கொண்ட பிரயாசையும் ஒருவருக்கொருவர் காட்டிக்கொண்ட அன்பும் அடக்கமும் நம்பிக்கையும் மிகக் குறிப்பிடத்தக்கவைகளில் ஒன்று.

தலைவர்கள் வருகை

மகாநாடானது ஜூலை மாதம் 2, 3 தேதிகளில் நடக்குமென்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், திரு நாயக்கர் அவர்கள் ஒரு வாரத்திற்கு முன்னாகவே வந்து ஏற்பாடுகளில் கலந்துகொண்டார். நாலைந்து தினங்களுக்கு முன்பாகவே அநேக பெரியோர்கள் வந்து ஜாகைகளை அமர்த்திக் கொண்டு மகாநாட்டின் நடவடிக்கைகளில் கலந்துகொண்டும் தங்கள் தங்கள் கருத்தை மகா நாட்டில் நிறைவேற்றிக் கொள்ள வெளியூர்களிலிருந்து தங்களுக்கு வேண்டிய பிரதி நிதிகளை அதிகப்படியாய் வரும்படி எழுதிக்கொண்டுமிருந்தார்கள். மகாநாட்டு துவக்கத்துக்கு முதல்நாளே பனகால் ராஜா அவர்களும் திருவாளர்களான எ. இராமசாமி முதலியார், பி. முனுசாமி நாயுடு, தணிகாசலம் செட்டியார், பி. வரதராஜுலு நாயுடு, திரு வி. கலியாணசுந்தர முதலியார் ஆகியவர்களும், மற்றும் சில முக்கியஸ்தர்களும் வந்துவிட்டார்கள். ஸ்ரீமான்கள் பி.டி. ராஜன், சௌந்தர பாண்டிய நாடார் ஆகிய கனவான்கள் 30-ந் தேதி வந்துவிட்டார்கள் எனவே மகாநாட்டுக்கு முதல் நாள் எல்லா தலைவர்களுமாகச் சேர்ந்து மகாநாட்டிற்கு வரக்கூடிய முக்கிய பிரச்சினையான தனிப்பட்ட நபர்கள் காங்கிரசில் சேர்ந்துகொள்ள அனுமதியளிக்கும் தீர்மானத்தைப் பற்றி யோசித்து முடிவு செய்வதற்காக கூட்டமும் கூட்டினார்கள். அக்கூட்டத்திற்கு ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் தேக அசௌகரியத்தை முன்னிட்டு போகமுடியாமல் போய்விட்டதுடன் கலியாணசுந்தர முதலியார், பி. வரதராஜுலு நாயுடு முதலியவர்களும் வரவில்லை ஆதலால் அக்கூட்டத்தில் ஒரு முடிவும் செய்ய முடியாமல் போய்விட்டது.

பிரதிநிதிகள் வருகை.

மறுநாள் காலையில நாலாபக்கங்களிலிருந்தும் பிரதிநிதிகள் ரயில்வே ஸ்டேஷனில் வந்து இறங்கிய வண்ணமாகவே இருந்தார்கள். திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம் முதலிய ஜில்லாவில் இருந்து சுமார் 120 பிரதிநிதிகளும், திருச்சியிலிருந்து 100 பிரதிநிதிகளும், தஞ்சாவூரிலிருந்து 250 பிரதிநிதிகளும், தென்னாற்காட்டிலிருந்து 80க்கு மேற்பட்ட பிரதிநிதிகளும், வடஆற்காட்டிலிருந்து 100 பிரதிநிதிகளும், செங்கல்பட்டு மதராஸ் முதலிய இ[illegible]விலிருந்து 150 பிரதிநிதிகளும், [illegible]ஆற்காடு சித்தூர் ஜில்லாவிலிருந்து [illegible] பிரதிநிதிகளும், சேலத்திலிருந்து 150 பிரதிநிதிகளும் ஈரோட்டிலிருந்து [illegible] பிரதிநிதிகளும், பவானி கோபிசெட்டிபாளையம் இவ்விடங்களிலிருந்து [illegible] பிரதிநிதிகளும், பொள்ளாச்சி உடுமலைப்பேட்டை இவ்விடங்களிலிருந்து 70, 80 பிரதிநிதிகளும், திருப்பூரிலிருந்து 50 பிரதிநிதிகளும், மற்றும் கோயமுத்தூர் ஜில்லாவைச்சேர்ந்த தாலூக்காக்களிலிருந்து 500, 600 பிரதிநிதிகளும் மலையாளம் தென்கன்னடம் இவ்விடங்களிலிருந்து 60 பிரதிநிதிகளும் ஆந்திர தேசத்திலிருந்து 40, 50 பிரதிநிதிகளும் விஜயமாகியிருந்தார்கள் என்றே சொல்லலாம்.

ஊர்வலம்.

அக்கிராசனர் ஊர் வலமானது கோயமுத்தூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. ஊர் வலத்தின் காக்ஷியானது மதுரை மகா நாட்டின் ஊர் வலத்தை வென்று விட்டதென்றே சொல்லலாம். ஏனெனில் மதுரை மகா நாட்டின் போது தலைவர்கள் வந்த தனி ஸ்பெஷல் வண்டியானது காலம் தவறி பகல் ஒரு மணிக்கு வந்ததாலும் ஊர்வலம் ஆரம்பித்தநேரம் மிக வெயில் கொடுமையாக இருந்ததாலும் வந்த பிரதிநிதிகள் பசியால் வாடிக்கொண்டிருந்ததாலும் ஊர்வலத்திற்கு அதிகமானவர்கள் வரக்கூடாமல் போனதோடு அவசரமாய்போய் சேரவேண்டியதாய் விட்டது. கோவையிலே காலை 8 மணிக்கு நல்ல குளிர்ந்த காற்றுடன் அதி உல்லாசமான காற்று வாடையில் ஆரம்பிக்கப்பட்டது. தலைவருக்கு இரண்டு குதிரை கட்டின லேண்டோ வண்டி அதாவது இந்த பத்து வருஷத்திற்குமுன் இதே கோயமுத்தூரில் பார்ப்பனரல்லாத மகாநாடு முதல் முதல் ஆரம்பித்த காலத்தில் முதல் தலைவரான கனம் பனக்கால் அரசர் பவனிக்கு எந்தவண்டியும் குதிரைகளும் ஊத்துக்குளி ஜமீன்தார[illegible] உதவப்பட்டதோ அதேவண்டியும் குதிரையும் வண்டியின் இப்போதைய சொந்தக்காரரான கோவை தாராளப் பிரபு ஸ்ரீமான் டி. கிருஷ்ண செட்டியார் அவர்களால் உதவப்பட்டு, அதில் மகா நாட்டுத்தலைவர் ஸ்ரீமான் குமாரசாமி ரெட்டியாரும், தலைவர் பனக்கால் அரசரும், மதுரை ஸ்ரீமான் எம். டி. சுப்ரமணியமுதலியார் அவர்களும், மகாநாட்டு உபசாரணைத்தலைவர் ஸ்ரீமான் பி. இரத்தின

சபாபதி கவுண்டர் அவர்களும் வீற்றிருக்கவும், பின்னால் அநேக மோட்டார் வண்டிகளில் வரிசை வரிசையாக மற்றத்தலைவர்கள் வீற்றிருக்கவும், முன்புறம் யானைகளும், குடைகளும், கொடிகளும், சாமரங்களும், குதிரைகளின்மீது தொண்டர் தலைவர்களும், இவற்றிற்குஇருமருங்கிலும் சுமார் 200 பதிந்து கொண்ட தொண்டர்களும் சுமார் 300 புதிய தொண்டர்களும், பாண்டுவாத்தியம், நாகசுர வாத்தியம், தேசியகீதம், ஜே சப்தம் முழங்கவும், சுமார் 5000 பேர்கள் முன்னும் பின்னுமாய் நடந்துவரவும், தெருக்களில் நெடுக வளைவுகளும் தோரணங்களும் ஒவ்வொரு வீதிகளிலும், கடைகளிலும்நமது சுயமரியாதைக்கு உற்ற ஆப்த வாக்கியங்கள் கொண்ட தட்டிகளும், அட்டைகளும், சுவர் விளம்பரங்களும், காட்டவும் ஒட்டவும் தொங்கவிடவுமான அலங்காரங்களும் துலங்க, அதிர் வேட்டுகள் ஆகாயம்நடுங்கும்படி அடிக்கடி சப்திக்க பவனிபுறப்பட்டது.

வழிநெடுக மரியாதை.

ஒவ்வொருவீட்டிலும் கடையிலும்நிறுத்தி நிறுத்திமாலைகள்போடவும், கூடை கூடையாய் மல்லிகை முல்லை புஷ்பங்களைமலர்மாரிபோல் வாரி வாரி இறைக்கவும், கடைவீதியில்வரும்போது கடைக்காரர்கள் நிறுத்தி மாலையிட்டு கல்கண்டு இறைக்கவும், பழங்கள் சூரைவிடவும், பன்னீர்க் குப்பிகளை உடைத்து உடைத்து பெருமழைபோல் தெளித்து கூட்டத்தினர்களின் ஆடைகளையெல்லாம் நனைக்கவும், வாசனைக் கடைக்காரர் கூட்டத்தில் உள்ளவர்களுக்கு வாசனைத்திரவியம பூசவும் ஆன வைபவங்களுடன் மற்றும் பொது ஜனங்கள் இன்னதுதான் நடக்கிறது இன்னது செய்யப்பட்டிருக்கிறது என்கிற உணர்ச்சிகூட இல்லாமல் மெய்மறந்து சிலைகள்போலங்கங்கு நின்றுவிடவும், ஸ்ரீமான் வெரிவாடசெட்டியார் பவனியை நேரமதிகமாய்விட்டதென்று அவசரப்படுத்தி கூட்டத்தை வெருட்டவும் ஜனங்கள் வண்டியில் முன்புறம் வந்து வழிமறித்து நின்றுகொண்டுமெதுவாகப் போகவேண்டுமென்று சொல்லவும், மற்றும் ஒவ்வொரு வீதியாரும் தங்கள் தங்கள் வீதிக்கு வரவேண்டுமென்று அழைக்கவும் ஸ்ரீமான் இரத்தினசாபதிமுதலியார் சம்மதம் கொடுக்காததால் அவர்மீது பலர் நிஷ்டூரப்பட்டுக்கொள்ளவும், ஒவ்வொரு நிலையிலும் பொட்டகிறுப்காரர்கள் புகைப்படம் பிடிக்கவும் மற்றும் எத்தனையோவைபவங்களுடன் பத்தரை மணிசுமாருக்கு ஊர்வலம் கொட்டகையை வந்து சேர்ந்தது.

கொட்டகை.

ஏராளமான ஜனங்கள் கொட்டகைக்குள் பிரவேசிக்க இருந்ததாலும கொட்டகையில் 3000, 4000 ஜனங்களுக்குமேல் இருக்க முடியாததினாலும், வெளியூர்க்காரர்களைத் தவிர மற்றவர்களை அதாவது உள்ளூர்க்காரர்களை கொட்டகைக்குள் விட முடியாது என்று கண்டிப்பான உத்திரவு போட்டு உள்ளூர்க்காரர்களை வெளியிலேயே நிறுத்திவிட்டார்கள் ஆனபோதிலும் கொட்டகையின் மேல்காவரி தவிர மீதி இடங்களெல்லாம் நிரம்பி விட்டதென்றே சொல்லவேண்டும்.

மகாநாடு.

சரியாய் 11 மணிக்கு மகாநாடு ஆரம்பம் செய்ததும் முதலாவதாக கோயமுத்தூர் ஜில்லா நாயுடு சமூகப்பிரமுகரான ஸ்ரீமான் பி எஸ். ஜி. நாயுடு அண்டு சன்ஸ் வெங்கிடசாமி நாயுடுகாரும், சேலம் பழனிசாமி பண்டாரமும், கோவை அய்யாமுத்துக் கவுண்டரும், சென்னை பக்கிரிசாமி பிள்ளையும், மற்றும் இரண்டொரு கனவான்களும் கடவுள் வாழ்த்து, தேசியப்பாட்டு, தலைவர்கள்மீது கவிகள் ஆகியவைகளைப் பாடினார்கள். இது முடிந்ததும் வரவேற்பு அக்கிராசனர் ஸ்ரீமான் ஏ. இரத்தினசபாபதிக் கவுண்டர் அவர்கள் ஒரு சிறு முகவுரையுடன் தமது அக்கிராசன உபந்நியாசத்தைப் படித்தார். பிறகு தலைவரை பிரேரேபிக்க வரிசையாக ஊத்துக்குளி ஜமீன்தார் குமார ராஜா ஸ்ரீமான்கள் சர். பாத்ரோ வி. ஐ. முனிசாமி பிள்ளை, கோவை பி எஸ். ஜி வெங்கிடுசாமி நாயுடு, சக்கரை செட்டியார், மலபார் ஜில்லா போர்ட் பிரசிடெண்டு மொய்டு சாயபு, தணிகாசலம் செட்டியார், தென்ஆற்காடு ஜில்லா போர்ட் பிரசிடெண்டு சீதாராம ரெட்டியார், சித்தூர் ஜில்லா போர்ட் பிரசிடெண்டு பி. முனிசாமி நாயுடு, விருதுப்பட்டி ராமசாமி நாடார் நாகை தொழிலாளர் சங்கத் தலைவர் கிருஷ்ணசாமி பிள்ளை, ஈ. வெ. ராமசாமி நாயக்கர் முதலிய பல கனவான்கள் ஸ்ரீமான் ரெட்டியாரின் பெருமைகளையும் தற்கால நிலைமைகளையும் எடுத்துச்சொல்லி பிரேரேபித்தும் ஆமோதித்தும் ஆதரித்தும் பெருத்த கரகோஷத்துடன் தெரிந்தெடுக்கப்பட்டு தலைவர் அக்கிராசனத் தமர்ந்ததும் பல கனவான்களிடமிருந்து வந்த தந்திகள் கடிதங்கள் முதலியவைகள் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டன தந்தி கடிதம் அனுப்பியவர்களின் பெயர்களாவன. சர். கே வி. ரெட்டி நாயுடு திவான்பகதூர். எம். கோபாலசாமி முதலியார். திவான்பகதூர், பி. சி. என். எதிராஜுலு நாயுடு ராவ்பகதூர் கோபாலகிருஷ்ண நாயர், திவான்பகதூர் கேசவபிள்ளை, பி. மல்லேல சப்பா டாக்டர் முத்துலக்ஷிமி அம்மாள், மதனகோபால் நாயுடு, ப. திருமலை பிள்ளை, மிர்சாபூர் ஜமீன்தார், சூணாப்பேட்டை ஜமீன்தார் அப்துல்ரசாக் சாயபு, டி. அகிநாராயண செட்டியார், காசிநாதன் செட்டியார், எஸ். ராமநாதன் முதலிய இன்னம் பல கனவான்களுமாவார்கள். வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள். மேடையில் தலைவர், உபசாலைத் தலைவர், பனக்கால் அரசா சர். பாத்ரோ, ராமசாமி முதலியார் ஊத்துக்குளி குமார ஜமீன்தார் மொய்டு சீதாராம ரெட்டியார், தணிகாசலம் செட்டியார் திவான் பகதூர் எம். கிருஷ்ண நாயர் தஞ்சை ஜில்லா பிரசிடெண்டு பன்னீர் செல்வம், பி. முனிசாமி நாயுடு, டி வரதராஜுலு நாயுடு, எம் கே ரெட்டி கான் சாயபு குலாப் உசேன் பி. வரதராஜுலு நாயுடு, கல்யாணசுந்தர முதலியார், வி. ஓ. சிதம்பரம் பிள்ளை, பவானி சிங்கு, தண்டபாணி பிள்ளை, கண்ணய்யர், ஜி வி. ராமநாதன், டி. வி சுப்பிரமணியம் பிஞ்சாலா சுப்பிரமணியம் செட்டியார், டி. ஏ. ஜி. ரத்தினம், கே. வி. மேனன், ஆரியா, சக்கரை செட்டியார், மாயவரம் சின்னைய பிள்ளை, பி. டி. ராஜன், சவுந்தரபாண்டிய நாடார், எஸ். எஸ். ஆநந்தம, பி. ராமநாதன், சிதம்பர முதலியார், ஆவுடையபிள்ளை, வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர், வி. டி. சுப்பய்ய கவுண்டர், திருப்பூர் கே. எஸ். ராமசாமி கவுண்டர், சேர்மென் துரைசாமி கவுண்டர், ஈரோடு வைஸ் பிரசிடெண்டு ராஜாக் கவுண்டர், பி. ராமசந்திர ரெட்டி, கஜேந்திர முதலியார், எம். சம்மந்த முதலியார், வெரிவாட செட்டியார், ஆவலப்பம்பட்டி ஜமீன்தார் சுப்பிரமணிய செட்டியார், சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் ஈங்கூர் இ. ஆர். கந்தசாமி கவுண்டர், செல்லபதி செட்டியார், சேலம சேர்மென் தம்மண செட்டியார், வைஸ்பிரசிடெண்ட் ராஜமாணிக்க பண்டாரம், வி. டி. பார்த்தசாரதி முதலியார், எம். டி. சுப்பிரமணிய முதலியார் கோபிதாசப்ப கவுண்டர், கள்ளிக்கோட்டை 'மிதவாதி' பத்திராதிபர் கோபாலமேனன், சாத்தூர் சுப்பிரமணிய நாய்னர், தஞ்சை ராமச்சந்திர செட்டியார், நெடும்பலம சாமியப்ப முதலியார், வலிவலம் மனைத்துணைநாத தேசிகர், தஞ்சை ஐ. குமாரசாமி பிள்ளை, அம்பலூர் கரிய கவுண்டர், கே. சி. கந்தசாமி முதலியார், செங்கல்பட்டு அப்பாசாமி முதலியார், வேலூர் ஜில்லா போர்டு பிரசிடெண்டு கிருஷ்ணசாமி நாயுடு, சேர்மென் பத்மநப முதலியார், போளூர் தாலூக்கா போர்டு பிரசிடெண்டு குப்புசாமி முதலியார், சோளிங்கர் தாலூக்கா போர்டு பிரசிடெண்டு ஸ்ரீனிவாச முதலியார், வீரப்ப கவுண்டர், ஈரோடு சேர்மென் டி. ஸ்ரீனிவாசமுதலியார், கா. அ. ஷேக்தாவுது சாகேப், ஈ. வி நஞ்சப்ப செட்டியார், ஈ. வி. கிருஷ்ணசாமி நாயக்கர், எஸ். இராமசாமி நாயக்கர், பி. வி. என். சி. ரங்கராஜு செட்டியார், இ. எம். சிக்கய்யநாயக்கர், ச. இஜி அண்டு சன்ஸ். வ. சாத்தப்ப செட்டியார், எ. ஆர். சோமசுந்தரம் செட்டியார் எஸ். முருகப்ப செட்டியார் கனவைசியநாடு மூ. வள்ளியப்ப செட்டியார், அருணாசலம் செட்டியார், க. ரு. முத்து சிவலிங்கம் செட்டியார், பழனியப்ப செட்டியார், டி. வி. அருணாசலம் செட்டி, ப கி த. ராமனுசஞ்செட்டியார். முத்து நாராயண செட்டியார், தியாகராஜ செட்டியார், "குமரன்" பத்திராதிபர் முருகப்ப செட்டியார், "நாடார் குலமித்திரன்" பத்திராதிபர் முத்து நாடார், திருப்பூர் சிக்கண்ண செட்டியார், வெங்கிடாசலம் பிள்ளை, வெங்கட்டப்ப கவுண்டர், திருச்சி அளகிரிசாமி நாயுடு, விஸ்வநாதம் பிள்ளை, டி. வி. கே. நாயுடு, சிங்காரம் பிள்ளை சோழவந்தான் கண்ணாயிரம் பிள்ளை, சுப்பிரமணிய முதலியார், வெங்கிடசாமி அய்யா, திருச்சி டி. பி. வேதாசலம் பிள்ளை மதுரை ராஜாபாதர் பட்டுக்கோட்டை வேணுகோபால்சாமி நாயுடு, அளகிரிசாமி நாயுடு, பாலக்காடு முருகப்பத்தரகர், திருவண்ணாமலை முனிசிபல் சேர்மென் முத்துக்குமாரசாமி முதலியார் முதலிய பெரியோர்களும் இன்னும் அநேக கனவான்களும் வீற்றிருந்தார்கள். விஜயம் செய்திருந்த கனவான்

இதன் தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

களில் இன்ன சமூகம் அல்லது இன்ன வகுப்பு அல்லது இன்ன இனப் பிரதிநிதிகள் வரவில்லை என்று சொல்ல முடியவே முடியாது என்னலாம். ஜமீன்தார்கள் பட்டதாரிகள் மந்திரி உத்தியோகம் பார்த்தவர்கள் சட்டசபை அங்கத்தினர் அசம்பளி அங்கத்தினர் ஜில்லாபோர்டு பிரசிடெண்டுகள் தாலூக்கா போர்டு பிரசிடெண்டுகள் யூனியன் பிரசிடெண்டுகள், கோ ஆப்பரேடிவ் பிரசிடெண்டுகள் இவைகளில் அங்கத்தினர்கள் முனிசிபல் சேர்மென்கள் கவுன்சிலர்கள். இந்த வேலைகளில் இருந்தவர்கள், தேவஸ்தான கமிட்டி தலைவர், அங்கத்தினர், இனாம்கள் என்போர்களில் ஆதிதிராவிடர்கள் என்போர் முதல் பார்ப்பனர் மகம்மதியர்கள் கிருஸ்தவர்கள் முதலியவர்கள் முதல் சகல வகுப்பு பிரமுகர்கள், தொழிலாளர்கள், குடியானவர்கள், வியாபாரிகள், பத்திராசிரியர் எழுதாளர்கள், நாட்டுக்கோட்டை பிரபுக்கள், தேசபக்தர்கள்' தேசிய வாழ்வுக்காரர்கள், தேசத்திற்கும் சமூகத்திற்குமாக 20 வருஷம், 10 வருஷம், 5 வருஷம், 2 வருஷம், 1 வருஷம், 6 மாதம், 3 மாதம், 1 மாதம் தண்டிக்கப்பட்டு ஒரு முறை இருமுறை மும்முறை நான்கு முறை சிறை சென்றவர்கள், சன்யாசிகள், சாமியார்கள், சீர்திருத்தக்காரர்கள், பெண்கள் ஆகிய பிரிவினர்களில் எல்லோரும் அளவுக்கு மீறின பிரதிநிதிகளாக வந்திருந்தனர், நமது நாட்டில் உள்ள எல்லாவித அதாவது பலவிதமான அரசியல் சமூக இயல் சீர்திருத்த இயல் முதலான அநேக விதமான மகாநாடுகளைவிட இந்த மகாநாட்டில்தான் அதிகமாக வந்திருந்தார்கள் என்று சொல்லலாம்.

கோட்டகையில் இடம் இல்லை.

பிரதிநிதிகள் கொட்டகை நிறைந்தும் கொட்டகையின்மேல் கட்டு காலரிகள் நிறைந்தும் கொட்டகையின் அடைப்புகள் எல்லாம் திறக்கப்பட்டு கொட்டகைக்கு வெளியிலும் பெஞ்சுகள் போட்டு அவைகளிலும் நிரம்பியும் அடிக்கடி சிற்சில இடங்களில் ஒரு பங்கு ஜனங்கள் வெளியில்போய்ப்பேச ஒருபங்கு ஜனங்கள் வந்து உட்காருவதும மறுபடி அவர்கள் வெளியில் போய் வேறு சிலர் வருவதும் இம்மாதிரிமாத்துக்கட்டு விதம் ஜனங்களை உள்ளேவிட்டு திருப்தி செய்வதுமாக இப்படி சமுத்திரம் போல ஜனங்கள் நிறைந்து இருக்க மகாநாடு நடந்துவந்ததென்றே சொல்லவேண்டும். இந்நிலையில் தலைவர் ஸ்ரீமான் செட்டியாரவர்கள் அன்றுமலர்ந்த செந்தாமரைபோன்ற முகத்தில் புன்னகை துலங்கிக்கொண்டிருக்க தமது அக்கிராசன உபன்யாசத்தை முதலில் ஆங்கிலத்தில் ஒருமணி நேரத்திற்கு மேலாகவே வாசித்தார். தலைவரின் வசீகரத் தோற்றமானது ஆங்கிலம் தெரியாத 100-க்கு 75 பாகம் ஜனங்கள் பாஷை தெரியாவிட்டாலும் பேசாமல யாதொரு சந்தடியும் இல்லாமல் பொறுமையுடன் காத்துக்கொண்டிருக்கச்செய்ததானது எல்லோருக்குமே ஆச்சரியமாயிருந்தது. பிறகு தமிழில் முக்கிய பாகத்தை வாசித்தார். அதை கேட்கக் கேட்க மக்களுக்கு சிலசமயம் ஆத்திரமும் சில சமயம் சந்தோஷமும் சில சமயம் மயிர்க்கூச்சலும், சில சமயம் ஆச்சரியமும் சில சமயம் பக்தியும் ஆக நவரசமும் பொங்கித் ததும்பிக்கொண்டிருந்ததின் காட்சியை நேரில் பார்த்தவர்களே சரியானபடி உணரக்கூடும். இது முடிந்ததும் சாப்பாட்டுக்காக மகாநாடு கலைக்கப்பட்டது.

சாப்பாடு.

கோயமுத்தூர் பிரமுகர்கள் மகாநாட்டைப் பார்த்துவிட்டு வந்திருந்த மகாநாட்டு பிரதிநிதிகளுக்கு சரியானபடி சாப்பாட்டு வசதிகள் செய்விக்கவேண்டும் என்னும் கவலையே அவர்களது தேகத்தையும் மனத்தையும் பெரும் பாகம் கொள்ளை கொண்டிருந்ததால் அச்சாப்பாடு எப்படி இருந்திருக்கும் என்பதை வாசகர்களே ஒருவாறு உணர்ந்துகொள்ளலாம், சாப்பாட்டுக்கு பெரும் வசதிகளுடன் பொது இடங்களாக 3, 4 இடங்களும் ஒவ்வொரு இடத்திலும் பத்து பத்து சமையல்காரர்களும் அதற்கு தனித்தனி மேல்பார்வை பார்ப்பதற்கு ஆட்களும் நியமனம் செய்யப்பட்டதுடன் ஒருநாளைக்குத் தினம் ஒரு பலகாரம் விதம் லட்டு ஜிலேபி வடை பாயசம் பழவர்க்கங்களுடனும் மங்கதாய்கறிகளும் நல்ல பரிசுத்தமான நெய் தயிருடனும் சாப்பாட்டுச்சீட்டு எனபதே இல்லாமல் பிரதிநிதிகள் பிரதிநிதி அல்லாதார்கள் உள்ளூர் வெளியூர் மகாநாட்டுச் சம்பந்தமுள்ளவர் சம்பந்தமில்லாதவர் மகாநாட்டுக்கு விரோதி விரோதி என்கிற வித்தியாசமே ஒருசிறிதுமில்லாமலும் அன்னக்கொடிகட்டிய சத்திரம்போல்வந்தவர்களுக்கெல்லாம் சாப்பாடு போட்டுக் கொண்டே இருக்கப்பட்டது. மகாநாட்டுக்கு ஒரு மாதத்திற்கு முன்பே ஊறுகாய் வகைகள் தயார் செய்யப்பட்டிருந்தன. பிரதிநிதிகள் சுமார் 6 மைல் தூரமுள்ள மகா நாட்டுப் பந்தலுக்கு போக மோட்டார்கார்களும் பஸ்களும் தாராளமாய் ஒவ்வொரு ஜில்லா பிரதிநிதிகளுக்கும் ஏற்பாடு செய்திருந்த ஜாகைகளின் முன்னால் சதா சர்வகாலம் நின்ற வண்ணமாகவே இருந்தன.

விஷயாலோசனை கமிட்டி.

சாப்பாடு முடிந்ததும் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் ஸ்ரீமான் வி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்களுடைய வீட்டின் உள்வாசல்முற்றத்தில் கூட்டப்பட்டது. அது விஷயாலோசனை கமிட்டிக்கு தெரிந்தெடுக்கப்பட்ட சுமார் 150 மெம்பர்களும் வேடிக்கை பார்க்கவந்த சுமார் 250 மெம்பர்களுமாக முற்றம் நிறைந்து இருந்தது. ஸ்ரீமான் பி.டி. ராஜன் அவர்கள் முதல் முதலாக ஒரு தீர்மானத்தை தெ. இ. ந. உ. சங்க நிர்வாகக் கமிட்டிக்கு அக்கிராசனர் என்கிற முறையில் பிரேரேபித்தார்.

அதை ஸ்ரீமான் திவான்பகதூர் பி. முனிசாமி நாயுடு ஆமோதித்தார் ஆமோதிக்கையில் அத்தீர்மானம் இன்னவிதமான அர்த்தம் அடங்கினதாய் இருந்தால் தான் பிரயோசனம் உண்டென்று சொன்னார் இது அங்குள்ள ஜனங்களைத் தூக்கிப்போட்டு விட்டது. அதாவது ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர்களும் காங்கிரஸ் கட்சியின் மூலமாகவே அரசியல் பிரதிநிதித்துவம் பெறும்படியாய் இருக்கும்படி பொருள் கொண்டதாக பேசினார். திவான்பகதூர் எம். கிருஷ்ணநாயர் அந்த பொருள்படும்படி தீர்மானத்திற்கு இடம் கொடுப்பது நமது இயக்கத்திற்கு ஆபத்து என்னும் பொருள்படும்படி பேசினார். சபை முழுதும் அசல் தீர்மானத்திற்கு விரோதமாய்ப் போனதுடன் இம்மாதிரி பேச்சை பேசக்கூட இடம் தருவதற்கு இயலாதபடி தனது பொறுமையை இழந்துவிட்டது. இதை எதிர்த்துப் பேசிய பலர் தனிப்பட்ட நபர்களை தாக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். ஸ்ரீமான் ஆரியா அவர்கள் பேசும்போது சற்று பொறுமையை இழந்துவிட்டார். ஸ்ரீமான் திரு. வி. க. முதலியார் அவர்களும் பொறுமையை இழந்து விட்டார் என்றே ஜனங்கள் நினைத்துக்கொண்டார்கள். ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு இந்த நிலைமையை பார்த்து பேசாமல் தப்பித்துக்கொண்டார். அது சமயம் இந்த நிலைமையைப் பார்த்த தலைவர்கள் இத் தீர்மானத்தையே இந்த மகா நாட்டில் பிரஸ்தாபிப்பதை நிறுத்திக்கொண்டாய்விட்டது என்பதாகக்கூட ஒரு தீர்மானம் பிரேரேபித்துவிட்டார்கள். தலைவர்கள் உள்பட எல்லோருக்குமே மனதிற்கு அதிருப்தி ஏற்பட்டுவிட்டது. பெரும்பான்மை பிரதிநிதிகளும் உழைப்பாளிகளும் தலைவர்கள் மேல் சந்தேகப்படவும் அவநம்பிக்கைப்படவும் இடம் கொடுத்துவிட்டது. இந்த நிலையில் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் அதிகாயலாவாயிருந்தாலும் பொது ஜனங்களுக்குத் தலைவர்களிடத்தில் உள்ள சந்தேகத்தைப் போக்கவும் வந்திருக்கும் மற்ற கனவான்களையும் பெருமைப்படுத்தவும் தக்க வண்ணமாய் பேசியதுடன் இந்த தீர்மானம் இன்னவிதமானால் யாருக்கும் ஆக்ஷேபணை இருக்க நியாயமில்லை என்றும் சொல்லிக்கொண்டு வரும்போதே மயக்கம் வந்துவிட்டதாய் உட்கார்ந்துவிட்டார் பிறகு அவர் பேசியதை அனுசரித்து ஒரு தீர்மானம் தயாரித்ததாக தயாரித்து ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களை அத்தீர்மானத்தின் மேல் அபிப்பிராயம் சொல்லச்செய்து ஸ்ரீமான் வி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்களைக்கொண்டு வியாக்கியானம் செய்வித்து உடனே ஓட்டு எடுக்கப்பட்டது. தீர்மானத்திற்கு அனுகூலமாக 6, 7 பேர் தவிர மற்ற எல்லோரும் ஓட்டு கொடுக்க தீர்மானம் நிறைவேறிற்று, சிலருக்கு அதிருப்தி ஏற்பட்டதாகக் காணப்பட்டது. மறுபடியும் பெயர் கூப்பிட்டு ஓட்டு எடுக்கப்பட்டது அப்போதும் அதே முடிவுதான் சொல்லவேண்டிவந்தது.

விஷயாலோசனைக் கமிட்டிக்கூட்டம் கலைந்ததும் அவரவர்கள் ஜாகைக்கு அவரவர்கள் போனதும், ஸ்ரீமான் நாயக்கர் ஜாகைக்கு சமூகத்திற்காக உழைக்கும் உழைப்பாளிகள் எல்லோரும் வந்து தங்களுக்கு இம்மகாநாட்டில் கலந்து கொள்ள இஷ்டமில்லை என்றும் கலந்து கொள்ளும் படி சொல்வதானால் இத்தீர்மானத்தை எதிர்க்க சுதந்திரம் கொடுக்கவேண்டும் என்றும் தீர்மானத்தை

11ம் பக்கம் பார்க்க.



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹு ஆனி 26உ

கோவை மகாநாட்டின் முடிவு.

சிறிது காலமாய் நமது மக்கள் இடையில் பிரஸ்தாபப்படுத்திக் கொண்டிருந்த கோவை மகாநாடு முடிவு பெற்றுவிட்டது. இதனால் நமது நாட்டுக்காவது சமூகத்திற்காவது ஏற்பட்ட பலன் என்ன என்று யோசிப்போமானால், ஒன்றுமில்லை என்று தான் சொல்லி ஆகவேண்டும்.

தீர்மானத்தின் வாசகங்கள் சர்வஜாக்கிரதையாக அமைக்கப்பட்டிருந்தாலும் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு சொல்லப்பட்ட காரணங்கள் எவ்வளவு சாமார்த்தியமுள்ளதாயிருந்தாலும் தீர்மானத்தின் பலன் நமது முன்னேற்றத்தை தடுத்துவிட்டதென்றே சொல்லுவேன். தீர்மானத்திற்குப் பிறகு இந்த ஒருவாரத்திற்குள் மக்கள் நிலைமையையும் மனப்பான்மையையும் பார்க்கும் போது பொது ஜனங்களுக்குள்ளாக ஜஸ்டிஸ் கட்சியார் காங்கிரசில்சேர்ந்து விட்டார்கள் என்கிற உணர்ச்சி பரவுவதற்கு ஆதாரங்கள் ஏற்பட்டு விட்டன. இந்த உணர்ச்சிக்கு நமது பார்ப்பனர்களின் விஷமப் பிரசாரம் ஒரு புறமிருந்தாலும், இப்போது நம்முடன் வந்து புதிதாக சேர்ந்தவர்கள் தங்களதுநிலைமையைக் காப்பாற்றிக்கொள்ள இம்மாதிரி திரித்து கூறவேண்டியதவசியமாயிருந்தாலும், ஜஸ்டிஸ் கட்சியில் உள்ளவர்களின் மனப்பான்மையும் நடத்தையுமே முக்கிய காரணமாயிருக்கிறது என்பதையும் நான் ஒளிக்க முடியவில்லை.

இத்தீர்மானம் நிறைவேறுவதற்கு நான் தடையாய் இல்லாமல் இருந்ததற்குகாரணம் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் சிலருக்கு காங்கிரசின் மூலம் பார்ப்பனர்களின் யோக்கியதையை வெளியாக்க தங்கள்பிரசாரங்களைச் செய்யலாம் என்கிற ஆசை உண்டாய் விட்டது என்பது எனக்கு நன்றாய்த் தெரிந்துவிட்டது. ஜஸ்டிஸ் கட்சிக்காக ஆதியில் நான் எவ்வித உதவியும் செய்தவனுமல்ல அது மாத்திர மல்லாமல் அதற்கு ஒரு சிறு கெடுதியாவது செய்யாமல் இருந்தவனுமல்ல இப்படிப்பட்ட ஒருவன் அக்கட்சியில்உள்ள முக்கிய தலைவர்கள் விருப்பத்திற்கு ஏன் முட்டுக்கட்டையாய் இருக்க வேண்டும் என்பதும் அவர்கள் என்னைவிட பொறுப்பும் எல்லா விஷயங்களும் நன்கு அறிந்தவர்கள் என்பதும் இக்கட்சியை எதிர்த்து வந்த சில கனவான்கள்கூட ஜஸ்டிஸ் கட்சியின் நேர்மையை உணர்ந்தோ அல்லது அதனுடைய தற்கால நிலைமையைக் கருதியோ அதனுடன் சேர்ந்து அதற்கு உதவி செய்வதாய் சொல்லுவதையும் நான் ஏன் எதிர்க்கவேண்டும். என்பதும், இப்படி எதிர்ப்பதின் மூலமாய் ஏற்படும் பலனை நானே ஏற்றுக்கொள்ளவேண்டி வந்து விட்டால் முழுப்பொறுப்பும் எனது தலையில் விழுவதானால் அதைச்சுமக்க எனக்கு அது சமயம் தைரியம் இல்லை என்பதும் முக்கியமாக எனது பலவீனத்தின் தன்மையான தாக்ஷண்ணியமுமே அத்தீர்மானம் நிறைவேற்ற உதவியாயிருந்ததே அல்லாமல் பல தலைவர்களும் சில பத்திரிகைகளும் கூறுவதுபோல் பெருந்தன்மையை உத்தேசித்தோ ஒற்றுமையை உத்தேசித்தோ நான் விட்டுக்கொடுக்கவில்லையாதலால் அவர்களது பாராட்டுதலுக்கும் புகழுரைகளுக்கும் நான் ஒரு சிறிதும் அருகனல்ல

காங்கிரசைப்பற்றிய எனது அபிப்பிராயம் ஏற்கனவே நான் தெரிவித்துவந்திருக்கிறேன். அதாவது அது திருத்தமுடியாததும் பாமர மக்களை பலிகொடுத்து வாழவேண்டிய படித்த வகுப்பினர்கள் சுய நலத்திற்காக ஏற்படுத்திய இயக்கம் என்பது தான். ஆனால் கோவை மகா நாட்டுத்தீர்மானத்திற்கு மூலபுருஷர்களா யுள்ளவர்கள் காங்கிரசை அப்படிப்பட்ட சுயநலக்காரர்கள் கைவசமிருந்து கைப்பற்றி திருத்தி பாமர மக்களுக்கு உபயோகப் படும்படி செய்யலாம் என்கிறார்கள். இந்தக் காரியம் மகாத்மா காந்தி செய்துபார்த்து தனது தோல்வியை கண்ணியமாய் ஒப்புக்கொண்டு அதாவது "படித்த வகுப்பாரை என் வழிக்குக் கொண்டுவரக்கூடிய சக்தி கடவுள் எனக்கு கொடுக்கவில்லை எனது தோல்வியை நான்கண்ணியமாய்ஒப்புக்கொள்ளுகிறேன்.' என்று சொல்லியிருப்பதுடன் தனக்கு தோன்றியமுறையில்தேசத்தொண்டு செய்யதன்னிஷ்டப்படிஒரு இயக்கத்தை ஆரம்பித்து விட்டார். அந்த இயக்கமும் படித்த வகுப்பார் ஆதிக்கத்திற்கு இடம் கொடுத்து விட்டதால் "புளிப்புக்கு நீளம் உருண்டைக்கு அதனப்பன்" என்பது போல் அவரது அகில இந்திய சர்க்கா சங்கமும் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் பார்ப்பனரல்லாத வகுப்பைநசுக்க பார்ப்பனசூழ்ச்சிக்கும் ஆளாகிவிட்டது. இனி அதன கொடுமையில் இருந்து தப்புவதற்காகவும் பாடுபடவேண்டிய பளுவும் நமக்கு ஏற்பட்டு இருக்கிறது.

எனினும் இப்போது நம்முடன் வந்து சேர்ந்து ஜஸ்டிஸ் கட்சியாரையும் காங்கிரசுக்கு அழைக்கிறவர்கள் ஒரு சமாதானம் சொல்லி இருக்கிறார்கள். அதாவது,

"காங்கிரசானது பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு விரோதமாயிருப்பது உண்மைதான் அதற்கு காரணம உண்மையான பார்ப்பனரல்லாதார் காங்கிரசில் இல்லாத காரணத்தாலே யல்லாமல் வேறல்ல. அந்தப்படி காங்கிரசில் மற்றும சிலர் சேர்ந்து உழைத்துப் பார்த்து முடியாவிட்டால் அதை விட்டு விட்டு வந்து நீங்கள் சொல்வது போல செய்கிறோம்" என்கிறார்கள். அவர்கள் சொல்லுவது ஒப்புக் கொள்ளக்கூடியதல்ல என்பதும் இதற்காக செலவிடுங்காலம் வீண் என்பதுமெனக்குநன்றாய்த் தெரியும். ஆனால் ஜஸ்டிஸ்கட்சியில்இருந்துகாங்கிரசுக்குபோக அநுமதி கேள்க்கும் சில கனவான்கள் இந்தக் காரணம் சொல்லுவதில்லை. மற்றபடி அவர்கள் சொல்லுவதென்னவென்றால் "பார்ப்பனரல்லாதார்களை நசுக்குவதற்காகவும் பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காகவும் பார்ப்பனர்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் அநேக ஆயுதங்களில் இந்தக் காங்கிரசும் ஒரு ஆயுதமாயிருக்கிறது. அதை எப்படியாவது அவர்கள் கையிலிருந்து பிடுங்கி விடவேண்டும். ஆதாவது அதின் மூலம் பார்ப்பனரல்லாதாருக்குக் கெடுதி ஏற்படாமல் பார்த்துக்கொள்வதற்காகவே அங்கு போக இஷ்டப்பட்டவர்களுக்கு அநுமதி கொடுக்கவேண்டும் என்கிறார்கள். இவையெல்லாம் ஸ்ரீமான் சி. ஆர். தாசைக் கொண்டு பார்ப்பனர்கள் சட்டசபைக்குப் போகக் காங்கிரசை அநுமதி கேட்டதற்கு சமானமாயிருந்தாலும் இந்த வாதங்கள் பாமர மக்களில் பலரை ஏமாற்றி அவர்களுக்கு இவைகளில்ஒரு மோகம் உண்டாகச் செய்துவிட்டதால்நமதுமுன்னேற்றத்திற்குநமது தனி இயக்கத்தைவிட வேறு கதி இல்லை என்று எண்ணி இருந்த மக்களின் கருத்து இப்போது இரண்டு காரியங்களில் பிரவேசிக்க நேர்ந்து விட்டதானது நமக்கு பலக் குறைவேயாகும்.

ஆனாலும் ஒன்றும் விசேஷமாய் முழுகிப்போய் விடவில்லை, ஆயிரக்கணக்கான வருஷங்களாய் ஏமாற்றப்பட்டு அழுத்தப் பட்டுக் கிடக்கிற மக்களுக்கு இந்த ஒரு சிறு தடையானது பிரமாதமான கெடுதி ஒன்றும் செய்துவிடாது. ஆனாலும் இவைகளுக்கெல்லாம் காரணமாய் தேசத்தின் நிலை மிகுதியும் நாணயக்குறைவுள்ளதாகவும் பிறரை ஏமாற்றுவதன் மூலமே மற்றொருவர் வாழக் கூடியதாகவும் பொது வாழ்க்கை ஏற்பட்டு விட்டது. பொய்யும் ஏமாற்றலுமே மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்களாயிருக்கும் போது யார்தான் என்ன செய்ய முடியும். உண்மைபேசுகிறவன் வாழ முடிவதில்லை. வாழ்க்கையை தியாகம் செய்யத் தயாராயிருந்து உண்மை பேசத்துணிகிறவர்கள் வெகு வெகு சொற்பமாயிருக்கிறார்கள். இவ்வியற்கைக்கு மகாத்மாகாந்தி கூட சிற்சில சமயங்களில் தப்ப முடியாமல் திக்குமுக்காடி வருகிறார் என்றால் மற்றவர்களைச் சொல்லுவதில் பயனில்லை. எனவே பொறுமையையும் நம்பிக்கையையும் கைவிடாமல் 3, 4 மாதங்களுக்கு விட்டுப் பார்ப்பதற்கு வேண்டிய தைரியததை ஆண்டவன் நமக்கு அருளட்டும். தலைவர்கள் என்போர்கள் தங்கள் சுய நலத்திற்காக நம்மை ஏமாற்றி இத் தீர்மானங்கள்செய்து கொண்டார்கள் என்றுநினைக்கும் படிநடந்து கொண்டார்களானால் பின்னால் என்ன செய்வது என்பது எமக்குத் தெரியும். பின்னும் இன்னும் பலமாய் வேலைசெய்ய இப் பொறுமை எமக்கு உதவும் என்றே நம்பி இருக்கிறேன். ஆதலால் காங்கிரசில் ஈடுபட்ட ஈடுபடுகிற மக்கள் நீங்கலாக ஆங்காங்குள்ள

கோயமுத்தூர் டவுன் ஹாலில் மாபெருங்கூட்டம்.

2000 பேருக்குமேல்குழுமி இருந்தார்கள்.

திரு. ஆர். கே.ஷண்முகஞ் செட்டியாரால் பிரேரேபனை செய்யப்பட்டு திரு. முனுசாமி நாயுடு தலைமை வகித்தார். திருவாளர் எ. இராமசாமி முதலியார், ஈ. வெ. இராமசாமி நாயக்கர், திரு வி. கலியாணசுந்தர முதலியார் இவர்களின் சொற்பெருக்கு.

திரு. எ. இராமசாமி முதலியார்.

சகோதரர்களே,

தென்னிந்திய நலவுரிமைச்சங்கம் ஆரம்பித்தது முதற்கொண்டு பத்து வருடகாலமாய் நான் அதில் அங்கத்தினராய் இருந்து வருகிறேன். இனியுமிருப்பேன். இச்சங்கம் சமூக விடுதலைக்கும் ராஜீய விடுதலைக்கும் எவ்வளவு கஷ்டப்பட்டு பலன் அடைந்திருக்கிறது. நாம் சர்க்காரோடு ஒத்துழைப்பதாகச் சொல்லுகிறார்கள். நேற்று செய்த தீர்மானங்களைஎடுத்துக்கொள்ளுங்கள். சுதந்திரத்திற்காக சார்க்காருடன் போராடுபவர்களில் நாம் முதன்மையாக இருக்கிறோம். ஆனால் படிப்படியாகவும் சாத்தியமான முறையிலும்முன்னேறிவருகிறோம். மாகாண சுயஆக்ஷிவேண்டுமென்றும இரட்டை ஆக்ஷி ஒழிய வேண்டுமென்றும் அதுவரையில் நாம் உத்தியோகம் ஒப்புக்கொள்ளுவதில்லை என்றும் தீர்மானித்திருக்கிறோம். காங்கிரசில் சேர விருப்பமுள்ளவர்களுக்கும் அநுமதி கொடுத்து இருக்கிறோம். இப்படி இருந்தாலும் பார்ப்பன பத்திரிகைகள் நம்மைபற்றி பொய் பிரசாரம் செய்து வருகின்றது.ஜஸ்டிஸ்கக்ஷிஉத்தியோகவேட்டைக்கக்ஷி என்று பாமர மக்களிடம் சொல்லி நம மீது பாமர மக்களுக்கு துவேஷத்தை உண்டாக்க முயன்று விட்டன. இந்நிலையில் ஸ்ரீமான் ஈ வெ. இராமசாமி நாயக்கர் நமது இயக்கத்தின் உண்மையை எடுத்துச்சொல்லி உயிர் கொடுத்தார். அன்றியும் 1815 வருஷத்தில் பிரஞ்சு தேசத்தில் ஸ்ரீமான் "ராசோ" என்பவர் அந்நாட்டின் சுயமரியாதையைக் காப்பாற்ற உழைத்தது போல் நம்நாட்டின் சுயமரியாதைக்காக உழைத்த நமது நாயக்கர் தமிழ்நாட்டின் "ராசோ" ஆவார். மக்களின் விடுதலைக்கு சுயமரியாதை அவசியம் என்கிற மந்திரத்தை முதல் முதல் மக்களுக்கு அவரே உபதேசித்தவராவார். புரோகித கொடுமையிலிருந்து தப்புவதே சுயமரியாதையின் முதல்படி என்பதை நமக்கு எடுத்துரைத்தவர் அவரேயாவார். அவரது தலைமையின் கீழ் இந்த சுயமரியாதை பிரசாரத்தை இந்தியா முழுதும் பரப்பத்தக்க ஒரு அகில இந்திய சபையாக நமது இயக்கமாகவேண்டும். நாம் காங்கிரசுக்கு போகவேண்டுமென்பது காங்கிரஸ் மூலம் ஒரு கூட்டத்தார் நமக்கு கெடுதிசெய்து வருவதை தடுக்கவேண்டும் என்பதற்காகத்தானே யல்லாமல் மற்றபடி பார்ப்பனர்களைப் போல் நாம் உத்யோகம் சம்பாதிப்பதற்கல்ல. ஆகையால் இம் முயற்சிக்கு நீங்கள் எல்லோரும் உதவிசெய்யவேண்டும் என்று பேசினார்.

ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர்,

சகோதரர்களே!

என்னைப்பற்றி ஸ்ரீமான் ராமசாமி முதலியார் அதிகமாக கூறிவிட்டார். என்னை தங்களது இயக்கத்தின் தலைவர் என்றும் நான் சொல்லுகிறபடியே நடக்கப்போவதாகவும் சொன்னார். இவ் விஷயம் எனக்கு மிகவும் வெட்கத்தையும் பயத்தையும் கொடுக்கிறது ஒரு காலத்திலாவது நான் தலைவனாய் இருந்ததே கிடையாது தலைமைத்தனமும் எனக்கு தெரியாது. அதற்குண்டான குணங்களும் என்னிடத்தில் இல்லை. நான் ஒரு தொண்டனாகவே இருந்துவர பிரியப்படுகிறேன். எனக்குதொண்டு செய்வதில் அதிக ஆசை இருக்கிறது. ஆதலால் என்னை ஒழுங்கான வழியில் நடத்தி என்னிடம் சரியானபடி வேலை வாங்கிக்கொள்ளுங்கள். நேற்றய மகா நாட்டில் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தார்களில் இஷ்டப்பட்டவர்கள் காங்கிரசில் சேரலாமென்பதாக ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. இவ்வித தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டிய அவசியமே நமக்கு ஏற்பட்டிருக்கவில்லை; தெ. இ. ந. உ, சங்கத்தாரில்தனிப்பட்ட நபர்கள் காங்கிரசில் சேர்வதை இச்சங்கத்தின் எந்தவிதியும் தடுப்பதில்லை. காங்கிரசில் சேர்ந்தவர்களும் ஏற்கனவே இதிலிருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனபோதிலும் நம்முடன் சேர்ந்து உழைப்பதற்காக காங்கிரசிலிருந்து வருகிற சிலரைத் திருப்தி செய்யவும் இங்கிருந்து காங்கிரசுக்குபோகிறசிலருக்கு பயத்தை தெளிய வைக்கவும் இத்தீர்மானம் செய்யப்பட்டு இருக்கிறது. காங்கிரசின் யோக்கிதையே கெட்டுப போயிருக்கும்—இந்தக்காலத்தில் காங்கிரஸ்காரன் என்று சொல்லிக்கொள்வதற்கே ஜனங்கள் வெட்கப்படும—இந்தக்காலத்தில் நம்மவர்கள்காங்கிரசில் சேர்கிறேன் எனபது பரிகசிக்கத்தகுந்த தென்பதும் அதில்போய் ஒன்றும் செய்யமுடியாதென்பதும் எனது அபிப்பிராயமாதலால் தான் நான் அந்தத்தீர்மானத்திற்கு அநுகூலமாய் இல்லை என்று கூறினேன் பிராமணர்களுக்கு பயந்துகொண்டாவது காங்கிரஸ் பிராமண ஆதிக்கம் என்பதற்காகவாவது நான் அவ்விதம் சொல்லவில்லை. காங்கிரசின் அடிப்படை தத்துவமே பாமரமக்களுக்கு பயன்படாதது, விரோதமானதும்என்பதனாலேதான் முதலில்,மகாத்மாகாந்திகாங்கிரசில் நான்இருந்ததற்குகாரணமெல்லம்காங்கிரசின் பழய தத்துவங்களை எடுத்து எறிந்துவிட்டு அதனால் பெற்றுப்பட்டகெடுதிகளையும் உடனே அழிக்க திட்டங்கள்போட்டுக்கொண்டு பாமர மக்களுக்கும் சிறப்பாக பார்ப்பனரல்லாதாருக்கும் நன்மை தரக்கூடிய திட்டங்களை மகாத்மா அதில் புகுத்தியதாலும் அவற்றால் நமக்கு நன்மை உண்டென்று நம்பியதாலும் நான் அதில் ஈடுபட்டு உழைத்து வந்தேன். கடைசியாகபார்ப்பன சூழ்ச்சியே வெற்றி பெற்று காங்கிரசின் பொய் வேஷம் வெளியாய் விட்டது. இப்பொழுது மறுபடியும் மகாத்மாவினால் செய்யமுடியாத காரியத்தை நாங்கள் செய்து விடுகிறோம் எங்களுக்கு நீங்கள் கொஞ்சம் உதவியாக மட்டில் இருங்கள் என்று ஸ்ரீமான் ஷண்முகம்செட்டியார், வரதராஜுலு நாயுடு, கலியாண சுந்தர முதலியார், முதலியவர்கள் உங்களை அழைக்கிறார்கள் அதற்கு தடையாக இருப்பதற்கு எனக்கு இஷ்டமில்லை.உங்கள் புத்தியைக் கொண்டே நீங்கள்யோஜித்துப்பாருங்கள் நான் கொஞ்ச காலத்திற்கு யாரையும் தடுக்காமல் விட்டுவிடப்போகிறேன். காங்கிரசின் யோக்யதையை தெரிந்து கொண்டு பிறகு வெளியே வரட்டும், காங்கிரசினால் உத்தியோகம் பெற்று விடலாம் என்பதினாலேயே தேசத்துக்கு ஒரு நன்மையும் விளைந்து விடாது.

யார் மந்திரி வேலை பார்ப்பதாய் இருந்தாலும் நமது லெக்ஷியம் நிறைவேறிவிடாது. பணக்கால் ராஜாவும் ஆறு வருடம் மந்திரி வேலை பார்த்தார்.அதன் பயனாய் அரிசி விலை ஒரு தம்படியாவது குறைந்து போகவில்லை. அதுபோலவே டாக்டர் சுப்பராயனும் மந்திரி வேலை பார்க்கிறார். அரிசி விலை யொன்றும் யேறிப்போகவுமில்லை. பணக்கால்ராஜா செய்த வேலையைத் தான் சுப்பராயனும் செய்து வருகிறார். ஆனால் பணக்கால் ராஜா பார்ப்பனரல்லாதாருக்கு உத்தியோகம் கொடுத்தார். டாக்டர் சுப்பராயனோ பார்ப்பனர்களுக்கு உத்தியோகம் கொடுத்துவருகிறார். இதற்கு காரணம் பணக்கால் ராஜாவைபார்ப்பனரல்லாதவர்கள் மந்திரி யாக்கினார்கள். அவருடைய மந்திரி ஸ்தானம் நிலைக்க பார்ப்பனரல்லாதார்கள் உதவி செய்துவந்தார்கள், அதனால் பார்ப்பனரல்லாதவர்கட்கு அவர் உத்தியோகம கொடுத்து வந்தார். டாக்டர் சுப்பராயனோ பார்ப்பனர்கள் தயவால் மந்திரியானார். அவருடைய மந்திரி ஸ்தானம் நிலைக்க பார்ப்பனர்கள் இரவும் பகலும் பாடுபட்டு வருகிறார்கள். அதனால்பார்ப்பனர்களுக்கே உத்தியோகம் கொடுக்கவேண்டியது டாக்டர் சுபபராயனின் கடைமையாய் போய் விட்டது. இம்மாதிரி கொள்கையுள்ள மாதிரிஸ்தானத்திற்கு யார வந்தாலும் இப்படித்தான் செய்யமுடியும மகாத்மா காந்தி வந்தாலும், இப்படித்தான் முடியும்

மற்றவர்சள் அவ்வவ்விடங்களில் உள்ள சுயமரியாதைசசங்கங்களையும் பார்ப்பனரல்லாதவாலிப சங்கங்களையும் பலப்படுத்திவைப்பதுடன் அவை இல்லாதஇடங்களில் உடனே இவைகளை ஸ்தாபிக்கவேண்டுமாய்க்கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்காக இரண்டு மூன்று உழைப்பாளிகளையும் நியமித்து வெளியில் அனுப்பிக்கொடுக்கலாம் என்று தீர்மானித்திருக்கிறேன். எனது கூட்டு உழைப்பாளிகள் நம்பிக்கை இழந்து விடாமல் தொடர்ந்து வேலைசெய்துகொண்டிருக்கவேண்டுமென றுகேட்டுக்கொளுள்கிறேன்.

இது ஒரு சோதனை காலம் என்பதில் சந்தேகமில்லை இச்சோதனைக்கு நாம் தப்பிப்பிழைக்க வேண்டுமே அல்லாமல்அதைரிமங் கொள்ளக்கூடாது உண்மைக்கு யோக்கியதை உண்டு என்பதை நமப வேண்டும். இன்னமும் எனது உடல் நலிவுமுழுதும் குணப்படவில்லை ஆதலால் விரிவாய் எழுத இயலாததற்கு வருந்தி இதைமுடிக்கிறேன்.

ஈ. வெ. ரா,

எனவே மந்திரிபதவியே நமது லக்ஷியமல்ல. நமது மக்களுக்கு சுயமரியாதைதான் பிரதானம். அதற்காக பாடுபடுவதற்கு யார் ஒப்புக்கொள்ளட. போதிலும் அவர்களுடைய மற்ற அபிப்பிராய பேதங்களை பாராட்டாமல் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டியதுதான். சுயமரியாதைதான் சுயராஜ்யத்திற்கு வழியே அல்லாமல் மந்திரி முதலிய பதவிகள் அல்ல. நமக்குள்ளிருக்கும் சுயமரியாதை அற்ற தன்மையை சற்று யோசித்துப் பாருங்கள். நம்மில் 'சுயராஜ்யமென்று பேசிக்கொண்டிருக்கிற பெரிய பெரிய மிராசுதார்கள் எல்லாம் பிரபுக்கள் எல்லாம் பார்ப்பனர்களின் காலில் விழுந்து கும்பிட்டு அவர்கள் கால் விரலுக்கு முத்தம் கொடுக்கிறவர்களாகவே இருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியும் நாமும் பார்ப்பன விஷயங்களைப் பற்றி மிகைப்படுத்திச் சொல்லுகிறோமென்று எங்கள் மீது பழிசுமத்துகிறவர்கள் கூட பார்ப்பனர் காலில் விழுந்துகொண்டுதான் இருக்கிறார்கள். பார்ப்பனர் தவிர வேறு வீட்டில் சாப்பிடுவதில்லை என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நேற்றைய தினம் இந்த ஊருக்குவந்த சங்கராச்சாரி என்ற பார்ப்பனருக்கு எத்தனையோ பிரபுக்கள் அவர் காலில் விழுந்து 1000, 2000 என்று பணத்தை அவர் காலில் கொட்டி . அவர் கால் கழுவிய தண்ணீரை பாத தீர்த்தம் என்பதாக வணக்கத்துடன் வாங்கி தலையில் தெளித்துக்கொண்டதுமல்லாமல் வாயிலும் ஊற்றிக்கொண்டார்கள். இந்த முட்டாள்தனமானது 500 வருடங்களுக்கு முன்னால் கிருஸ்தவ சமூகத்தில் இருந்த அதாவது "பாவமன்னிப்பு டிக்கட்டு விற்கிறதான" அவரவர்கள் பாபத்திற்கு தகுந்தபடி விலை போட்டு பணம் வாங்கிக்கொண்டு விற்று வந்த மூட நம்பிக்கையைவிட முட்டாள்தனமாக இருக்கிறது. இந்த முட்டாள்தனமும் மூட நம்பிக்கையும் போனபிறகுதான் கிருஸ்தவ நாட்டிற்கும் ஆட்சிபுரியும் சக்திவந்தது. அதன் பிறகுதான் அது பெரும்பான்மையான தேசத்தை ஆளத் தலைப்பட்டது.

அதுபோலவே நமது மூட நம்பிக்கையும் முட்டாள்தனமும் நம்மை விட்டு விலகி சுயமரியாதையை அடைந்த பிறகுதான் நாம் ஆட்சிபுரிவதற்கு உரியவர்களாவோம். நமது நாட்டில் உயர்ந்த ஜாதி என்கிற கொள்கை ஒழிந்து தாழ்ந்த ஜாதி என்கிற கொள்கை அழிந்துபட்டபின்தான் "சுயமரியாதையை" நினைப்பதற்கு யோக்கியதையுண்டு. ஒரு மனிதனைப் பார்த்துப் பிராமணன் என்று சொல்வதினாலேயே நாம் தாழ்ந்தஜாதி என்பதும். சூத்திரன் என்பதும் பிராமணனது வைப்பாட்டிமக்கள் என்பதையும் நாமே ஒப்புக்கொண்டவர்களாகிறோம். இதைப்பற்றிக் கவலையில்லாத ஜனங்களுக்கு சுயராஜ்யம் எதற்காக, காங்கிரஸ் எதற்காக, சங்கங்கள் எதற்காக, பொது நலச் சேவை என்கிற வேஷங்கள் எதற்காக, பொய்யான உத்தியோக சண்டையின் பயனாய் இப்பேர்ப்பட்ட இழிவான தத்துவங்கள் எல்லாம் நிலைபெற இடமேற்பட்டு விடுகிறது. மற்ற மதஸ்தர்களைப் பார்த்தாவது நமக்கு புத்தி வரவேண்டாமா? உலகத்தில் உள்ள எந்த மதத்திலாவது பிறவியின் காரணமாக ஒருவன் காலில் ஒருவன் விழுகிறானா? ஒருவனுக்கொருவன் வைப்பாட்டி மகன் என்று ஒப்புக்கொள்ளுகிறானா? இம்மாதிரி கொடுமைகள் எல்லாம் தீர்வதற்குக் காங்கிரசில் இடமிருக்கிறதா? அல்லது நமது சங்கத்தில் இடமிருக்கிறதா என்பதைப்பற்றி யோசித்துப் பாருங்கள். உண்மையான இடத்தை விட்டுவிட்டு நமது குறைகள் நீங்குவதற்கு காங்கிரஸ் போன்ற கற்சுவற்றில் முட்டிக்கொள்வதில் யாதொரு பயனுமில்லை.

தவைசியநாட்டில்
திரு. நாயக்கரின் சுற்றுப் பிரயாணம்

15-ந் தேதி வெள்ளிக்கிழமை இரவு ஈரோட்டிலிருந்து புறப்பட்டு 16-ந்தேதி செட்டிநாட்டுக்குச்செல்வார். ஒருவாரம் வரையில் அங்கு தங்கி அநேக பொதுக்கூட்டங்களில் சொற்பொழிவு நிகழ்த்துவார். 22, 23-உ வாக்கில் மீண்டும் ஈரோடு வந்து சேர்வார்.

வி. பி. ராமசாமி ஐயரவர்களின் சமாதானம்.

கோவை மகாநாட்டுத் தீர்மானத்தைக் கண்டு கவர்னர் திகில் கொண்டாரோ என்னவோ ராமசாமி ஐயர் தமது சூழ்ச்சிகளுக்கு ஆபத்து வந்ததென்பதை உணர்ந்து தஞ்சை, திருச்சி ஜில்லாவில் உள்ள சில பார்ப்பனர்களின் கூட்டத்தை தஞ்சையில் கூட்டி அதில் தாமும் தமது சர்க்காரும் யோக்கியமாக நடந்து வருவதாகவும், மேட்டூர் திட்டத்தின் வேலையை நிறுத்திவைக்க வேண்டுமென்பதற்கு ஆச்சரியப்படுவதாகவும் அதற்கு கமிஷன் ஏற்படுத்தும் வரையில் வேலையை நிறுத்திவைப்பது சாத்தியமாகாதென்றும், இஞ்சினீர்கள் எல்லாம் கூடிச் செய்ததைக் கண்டிப்பதைக்கண்டு ஆச்சரியப்படுவதாகவும், இத்திட்டத்தால் வரிசெலுத்துவோர்களுக்கு அபாயமில்லையென்றும், தானொன்றும் செய்துவிடவில்லை என்றும் கூறுகிறார்.

நம்பிக்கையில்லை.

நமது சட்டசபை அங்கத்தினர் திரு. பி. இராமச்சந்திர ரெட்டியவர்கள் இப்பொழுதுள்ள மந்திரிகளிடத்தில் நம்பிக்கையில்லை என்ற தீர்மானம் அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் கொண்டுவரப் போவதாய்ச் சட்ட சபைத் தலைவருக்கு அறிவித்துவிட்டார். சுயராஜ்யக் கட்சியார் கௌஹாத்தித் தீர்மானப்படி யோக்கியர்களாய் இனிமேலாவது நடந்துகொள்ள விரும்புவார்களாயின் மந்திரிகள் ஒழிந்துபோவது திண்ணம். இரட்டை ஆட்சியும் குழிதோண்டி புதைக்கப்பட்டாய்விடும். ஏனெனில், இம் மந்திரிகள் ஒழிந்துபோனால் நாம் இரட்டை ஆட்சியுள்ள மட்டும் உத்தியோகங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டோம். (திராவிடன்)

மற்ற மகாநாடுகள்.

வடாற்காடு ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாடு அடுத்தமாதத்தில் நடை பெறக் கூடும். சேலம், திருச்சி, செங்கல்பட்டு ஜில்லா மகாநாடுகளும் நடை பெற அங்குள்ள கனவான்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமாய்க் கோருகிறோம். தென்னாற்காடு ஜில்லா விஷயம் கிணற்றில் விழுந்த கல்லைப்போல் அசைவற்றிருக்கின்றதின் இரகசியம் நமக்கு விளங்கவில்லை. அங்குள்ள கனவான்கள் எதாவது முயற்சிக்க வேண்டுகிறோம்.

பெங்களூர் "கதர்" காக்ஷி:--- தேசிய கல்விச் சாலை கட்டிடத்தில் கதர் காக்ஷி சாலை நடைபெறுகிறது. இதை மகாத்மா காந்தியடிகள் திறந்து வைத்தார். மைசூர் திவான், பண்டிட். மதன்மோகனமாளவியா முதலிய பிரமுகர்கள் உள்பட ஏராளமான மகா ஜனங்கள் காட்சி சாலையை கண்டு ஆனந்தித்து வருகிறார்கள். அடிகள் காட்சி சாலையை திறந்து வைக்கும் பொழுது கதரின் வளர்ச்சியைப்பற்றி மிக ருசிகரமான ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். ஆறு வருடங்களுள் 1500 கிராமங்களில் 50000 ஜனங்களுக்கு பெருதவி செய்து வருவதாயும், 6 வருடங்களுக்குமுன் எழுலக்ஷ ரூபாய்க்கு கதர் உற்பத்தியாயிற்றெனறும் இவ்வருடம் இருபத்தாறு லக்ஷ ரூபாயிக்குக் கதர் உற்பத்தியாய் இருப்பதாகவும் 50000 ராட்டிணங்கள் நூற்பதால் தச்சு, கொல்லன், நெசவு, சாயம், தட்டி, அச்சு, சலவை வர்த்தகம் முதலிய தொழில்களால்' ஐம்பதாயிரம் பெயர்கட்கதிகம் பிழைத்து வருவதோடும் ஆயிரம் பேர்கள் தேசசேவை செய்பவர்கட்கும் ஜீவனத்திற்கு வழி இருப்பதாகக் கூறினார். ஒருவாரம் வரையில் இக்காட்சி நடைபெறும்.

குறிப்பு:---

மகாநாடு சம்பந்தமான விஷயங்களை அதிகம் நமது பத்திரிகை தாங்கிவருவதால் நிருப நேயர்கள் தங்கள் நிருபங்கள் பிரசுரிக்கபடாமைக்கு மன்னிக்கக் கோருகிறோம்,

சத்தியாக்கிரகம்.

சத்தியாக்கிரகம் என்பது பற்றி 3, 4 வாரங்களுக்குமுன் ஒரு சிறு குறிப்பு எழுதி இருந்தோம். அதைப் பார்த்து பலர் வருத்தப்பட்டார்கள். மற்ற பத்திரிகைகாரர்கள் யாரும் அதை கொஞ்சமும் கவனிக்காமல் சத்தியாக்கிரகம் சத்தியாக்கிரகம் என்பதாக பெரும தலைப்பு இட்டு எழுதிவந்தார்கள். நாகபுரி ஆயுதசத்தியாக்கிரகம் ஸ்ரீ அவாரி ஜயிலுக்கு போனதும் நிறுத்தப்பட்டுப் போய் விட்டது. அதன் பலனாய் நமது நாட்டு சத்தியாக்கிரகப் பேச்சும் நிறுத்தப் பட்டுப் போய் விட்டது. இம்மாதிரி பொறுப்பில்லாமல் நடக்கும் காரியங்களால் நமது நாட்டுக்கு வரும் கெடுதிகளை பலர் உணர்வதில்லை. தொண்டர்கள் என்போர்களின் நிலைதான் இப்படி என்றாலும் பத்திராதிபர்களின் யோக்கியதை இதைவிட மோசமானதாயிருப்பதோடு இப்பேர்ப்பட்ட பொறுப்பற்ற சங்கதியை அனுமதிப்பதற்கு அனுகூலமாகவே இருந்து வருகிறது. இனியாவது தங்கள் கடனை உணர்வார்களாக.

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

பற்றி மகாநாட்டில் வாதப் பிரதிவாதம் செய்ய தாராளமாய் அநுமதிக்கவேண்டும் என்றும், அப்படிக்கில்லாதபட்சம் வேறு இயக்கம் அதாவது சுயமரியாதை இயக்கம் என்பதாகவே ஒரு இயக்கம் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் அதற்காக சுமார் 250 பிரதிநிதிகள் கையெழுத்தும் வாங்கி இருப்பதாகவும் இக்கையெழுத்துககளில் எல்லாவித கனவான்களும் கலந்திருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. கடைசியாக ஸ்ரீமான் நாயக்கர் காங்கிரசில் யார் சேருவதானாலும் சேரவில்லையானாலும் ஜஸ்டிஸ் கட்சியில் யார் சேர்ந்தாலும் சேரவில்லையானாலும் தான் அதைப்பற்றி லட்சியம் செய்யவில்லையென்றும் தனது அபிப்பிராயத்தோடு ஒத்து கலந்து உழைத்து வந்த உங்கள் அனைவருக்கும் திருப்தியான ஒரு தீர்மானம் மகாநாட்டுக்கு வெளியிலேயே தயார் செய்யப்படாவிட்டால் தானும் இனி விஷயாலோசனைக் கமிட்டிக்கோ அல்லது மகாநாட்டிற்கோ போவதில்லை என்று உறுதி கூறவும் எல்லோரும் சந்தோஷமாக ராத்திரி பன்னிரண்டரை மணிக்கு மேல் நாயக்கர் ஜாகையைவிட்டு படுக்கைக்குப் போனார்கள். அதுபோலவே மறுநாள் காலையில் மகாநாட்டைக் கூட்டாமல் விஷயாலோசனைக்கமிட்டிக்கூட்டம் கூட்டப்பட்டது நாயக்கரும் மற்றும் சிலரும் கமிட்டிக்கூட்டத்திற்குப் போகவில்லை ஆனாலும் யாவருக்கும் சம்மதமாகவும், ஏகமனதோடு நிறைவேறக்கூடியதாகவும் ஒரு தீர்மானம் உண்டுபண்ண பொறுப்புள்ள சில தலைவர்கள் அதிகமாக பொறுமையுடன் முயற்சி எடுத்துக் கொண்டார்கள் அவர்களில் முக்கியமானவர்கள் ஸ்ரீமான்கள் பி. டி. ராஜனும், சி. எஸ். ரத்தினசபாபதி முதலியாருமே ஆவார்கள். ஸ்ரீமான் நாயக்கர் ஜாகையில் முதல் நாள் விஷயாலோசனைக்கமிட்டியில் வந்த தீர்மானத்தை எதிர்த்த கனவான்களாகிய ஸ்ரீமான்கள் தஞ்சைபன்னீர்ச்செல்வம் மாயவரம், சின்னையா பிள்ளை, ஜே. என். ராமநாதன், பட்டுக்கோட்டை அளகிரிசாமி நாயுடு, சென்னை சிவப்பிரகாச முதலியார் சி. எஸ். கணபதி ராவ் மற்றும் சில கனவான்களுடன் கலந்து அவர்கள் இஷ்டப்படியே அவர்களைக்கொண்டே வாசகம் சொல்லச்செய்து மற்றும் எல்லோருக்கும் அதைக்காட்டி ஆட்சேபனை சமாதானம் கேட்டு முடிவு செய்து கொண்டார்கள். இந்த சந்தர்ப்பம் எல்லோருக்கும் ஒருவித சந்தோஷத்தைக்கொடுக்கக்கூடியதானாலும் அந்தரங்கத்தில் 100க்கு 99 பிரதிநிதிகளுக்கும உழைப்பாளிகளுக்கும் மகாநாட்டில் இந்தப்பிரஸ்தாபம் வருவதென்பது கொஞ்சம்கூட சமாதானமாகவே காணப்படவில்லை. சென்னையிலிருந்து வந்த ஸ்ரீமான்கள் பி. வரதராஜுலு நாயுடு அவர்களுக்கும், கல்யாணசுந்தர முதலியார் அவர்களுக்கும், கோவை ஷண்முகம் செட்டியார் அவர்களுக்கும் மரியாதை காட்டுவதை உத்தேசித்தும், சென்னைத் தலைவர்களைத் திருப்தி செய்யவும் காங்கிரஸ் பார்ப்பனர்களின் அயோக்கியத்தனத்தை அடக்க இது ஒரு வழி என்பதையே இத்தீர்மானத்திற்கு முக்கிய காரணமாகச்சொல்லிக் கொண்டதை உத்தேசித்தும் ஒருவாறு ஜனங்கள் ஆட்சேபிக்காமல் சும்மாயிருந்ததும், நடுநிலைமை வகித்ததும் என்றேசொல்லவேண்டும். மற்றபடி இன்னும் பல தீர்மானம் அதாவது—இந்து மதம் என்னும் சூழ்ச்சியும், காங்கிரஸ் என்னும் ஸ்தாபனமும், இந்திய நாடு சுயமரியாதையும், அரசியல் சுதந்திரமும் பெறுவதற்குத் தடையாயும் இருப்பதால் இவ்விரண்டு தத்துவங்களையும், அழிக்கவேண்டும் என்பதாக அனுப்பப்பட்ட தீர்மானத்தையும், சென்னை மாகாண கவர்னர் பிரபுவைப் பற்றி சிலகாரணங்கள் காட்டி திருப்பி அழைத்துக்கொள்ளவேண்டும் என்பதாக அனுப்பிய தீர்மானத்தையும், கவர்னர் பிரபுவையும் மந்திரிகளையும், நிர்வாக சபை சட்டமெம்பரையும் அவர்கள் வரும் இடங்களில் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்பதாகவும் அனுப்பபட்டிருந்த தீர்மானங்களை அனுப்பியவர்கள் நேற்றைய தீர்மானத்தின்பேரில் உள்ள மனத்தாங்கலால் மறுநாள் விஷயாலோசனைக் கமிட்டிக்குப் போகாமல் நின்றுவிட்டதின் பலனாய் பிரஸ்தாபத்திற்கு கொண்டுவரப்படாமலே போய்விட்டது. ஆனாலும், நின்றுவிட்டவர்களைத் திருப்தி செய்ய கவர்னர்பிரபுமீது நம்பிக்கையில்லாத் தீர்மானமும், உத்தியோகம் ஒப்புக்கொள்வதில்லை என்கிற தீர்மானமும், வெகு உற்சாகத்தோடு நிறைவேற்றப்பட்டதானது எல்லோருக்கும் சென்னைத் தலைவர்களிடமும் மகாநாட்டினிடமும், நம்பிக்கையும், ஆசையும்உண்டாக்கிவிட்டதென்றே சொல்லலாம். மற்றபடி பழய—அதாவது மதுரை, மாயவரம மகாநாடுகளின் தீர்மானங்களும், மற்றும் சில தீர்மானங்களும் ஏகமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டன.

இளைஞர் மகாநாடு.

மறுநாள் காலையில் விஷயாலோசனைக் கமிட்டி ஒரு பக்கம் நடந்துகொண்டிருக்க கொட்டகையில் இளைஞர் மகாநாடு நடத்தப்பட்டது, வரவேற்புத்தலைவர் ஸ்ரீமான் சி-வி சுப்பைய செட்டியாரும், அக்கிராசனர் ஸ்ரீமான் திருச்சி D- A- G- இரத்தினம் பிள்ளை அவர்களும் தங்களது உபந்நியாசங்கள செய்யப்பட்டதும் கூட்டத்தை ஒத்திப் போட்டார்கள்.

மகாநாட்டின் இரண்டாவது கூட்ட நடவடிக்கை.

இரண்டாவது நாள் பகல் இரண்டரை மணிக்கு மகாநாடு கூடியது, மகாநாட்டில் முதலாவது முக்கிய தீர்மானமாகிய ஒற்றுமையை உத்தேசித்தும், பார்ப்பனர்களது அக்கிரமங்களை உத்தேசித்தும், எல்லோரும் காங்கிரசில் சேரவேண்டுமென்றும், இஷ்டப்பட்டவர்கள் காங்கிரசில் சேரலாம் என்றும் பொருள்கொண்ட தீர்மானம் ஸ்ரீ ஜெ- என்- ராமநாதன் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டவுடன் அதில் ஏதோ ஒரு வார்த்தை திருத்தப்படவேண்டுமென்று ஸ்ரீமான் ஆர், கே- ஷண்முகம் செட்டியார் சில கனவான்களை வற்புறுத்தினர்- அதற்கும் ஒப்புக்கொண்டு முறையே ஸ்ரீமான்கள் சாத்தூர் சுப்பிரமணிய நாயனார், டி. வி. சுப்பிரமணிய பிள்ளை, அளகிரிசாமி நாயுடு, வி. ஓ. சிதம்பரம் பிள்ளை, என். தண்டபாணி பிள்ளை, அக்கிராசனர் முதலியோர்களால் ஆமோதித்து ஆதரித்து தாங்கி பேசபட்டு ஏகமனதாய் நிறைவேறிவிட்டது. இது சமயம் ஜனங்களுக்கு ஏற்பட்ட குதூகலத்திற்கு அளவே இல்லை, இந்ததீர்மானம நிறைவேறிவிடும் என்கிற குறிப்புகள் காணப்பட்டவுடன் ஸ்ரீமான்கள் பி. வரதராஜுலு நாயுடுவுக்கும், கல்யாண சுந்தர முதலியாருக்கும் தகவல் டெலிபோன் மூலம தெரிந்த பின்பு அக் கனவான்களும் திடீரென்று மகாநாட்டில் பிரவேசமானார்கள் அது சமயம் ஜனங்கள் செய்த ஆரவாரம் கொட்டகைகூரை தூக்கப்பட்டுவிடுமோ என பயப்படக்கூடியதாயிருந்தது இக் காக்ஷி மகா நாட்டுமுக்கிய காக்ஷிகளில்ஒன்றுஎன்றுசொல்லலாம்.

இக் காட்சி முடிந்தவுடன் ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியார் கூட்டத்தின் முன்னால் வந்து தம்மை இக் கட்சியில் சேரும்படி அழைத்ததற்கும் இக் கட்சியில் இஷ்டப்பட்டவர்களுக்கு காங்கிரசில் சேர அனுமதி கொடுத்ததற்கும் மகிழ்ச்சி அடைவதுடன் நன்றி செலுத்துவதாகச்சொல்லி காங்கிரஸ் கொள்கைக்கும் ஜஸ்டிஸ் கொள்கைக்கும் யாதொரு வித்தியாசம் இல்லை என்றும், ஆனால் காங்கிரசில் வகுப்பு ஆதிக்கம் அதிகம் நடைபெறுகிறதென்றும் ஜஸ்டிஸ் கட்சியில் கேட்கப்படும் வகுப்புவாரி உரிமைக் கொள்கையைகாங்கிரசு வெகு காலமாகவே ஒப்புக்கொண்டு கிருஸ்தவர் மகம்தியர் முதலிய வகுப்புக்கு கொடுத்துவருகிறதென்றும் மற்றும் பல விஷயங்களைச்சொல்லி இன்று முதலில் தானும் ஸ்ரீமான்கள் பி. வரதராஜுலு நாயுடுவும், கல்யாணசுந்தர முதலியாரும்ஜஸ்டிஸ்கட்சியில் சேர்ந்து விட்டதாகவும், அதுபோலவே ஜஸ்டிஸ் கட்சியிலும் பலர் வந்து காங்கிரசில் சேர்ந்து ஐயங்கார்கள் ஆதிக்கத்தையும் பார்ப்பன ஏகபோக உரிமையையும் ஒழித்து காங்கிரசை தேசத்திற்குப் பயன்படச்செய்யவேண்டுமென்றும்தலைவர்கள் விட்டுக்கொடுத்ததற்கு நன்றிசெலுத்துவதாகவும் சொன்னார்.

பி. வரதராஜுலு நாயுடு.

ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவும் செட்டியாரை ஆதரித்துப்பேசி எல்லோரும் காங்கிரசில் சேர்ந்து மைலாபூர் கோஷ்டியின் அக்கிரமங்களை அடக்கவேண்டும் என்றும் பார்ப்பனரல்லாதார் மிகுந்த தேசபக்தர்கள் என்றும் பட்டங்களுக்கும் பதவிகளுக்கும் கௌரவங்களுக்கும் ஆசைப்பட்டு ஸ்ரீமான் சீனிவாச சாஸ்திரியைப் போல தேசத்தையும், மகாத்மா காந்தியையும் காட்டிக்கொடுக்க மாட்டார்கள் என்றும் மகாத்மாவை ஜெயிலுக்கு பிடிக்கும்படி சர்க்காருக்கு யோசனை சொல்லிக்கொடுத்தது ஷி சாஸ்திரியார்தான் என்றும், மகாத்மாவின் ஒத்துழையாமை திட்டத்தை ஒழித்து காங்கிரசின் யோக்கியதையைக் கெடுத்து மகாத்மாவை மூலையில் உட்காரவைத்தவர்கள் பார்ப்பனர்கள் தான் என்றும சொல்லி தானும ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர்ந்து விட்டதாகவும பார்ப்பனரல்லாதார் நன்மைக்காகவே திரு நாயக்கர் அவர்கள் விட்டுக்கொடுத்தார் என்றும் அவ

ருக்கு நன்றி செலுத்துவதாகவும்சொன்னர்.

ஸ்ரீமான் கல்யாணசுந்திர முதலியார்.

ஸ்ரீமான் முதலியார் எழுந்து தனக்கு இன்றைய சம்பவம் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்திருப்பதாகவும், இது வரை தாங்கள் பாதி மனிதனுகவே காங்கிரசில் இருந்ததாகவும் இன்றே தாங்கள் முழுமனிதர்கள் ஆனேம் என்றும் தாங்கள் இக் கட்சியை விட்டு வெளியில் இருக்கும் போதே சத்தியமூர்த்தி முதலிய பார்ப்பனர்கள் எங்களை ஜஸ்டிஸ் கட்சியார்கள் என்று சொல்லிவந்தார்கள் என்றும் பிராமணர்களே வகுப்புவாதிகளாயிருக்கிறார்கள் என்பது இப்போது தங்களுக்கு நன்ருய்த் தெரியவருகிறது என்றும் ஸ்ரீமான் பனகல் ராஜா, ராமசாமி முதலியாரவர்கள் இக்கட்சிக்கு தலைவர்களாயிருப்பது போலவே காங்கிரசிலும் சேர்ந்து காங்கிரஸிலும் தலைவர்களாயிருந்து நடத்த ஆசைப்படுகிறேம் என்றும், இந்த மகாநாடு இம்மாதிரி ஒற்றுமைப் பட்ட பெருமை ஸ்ரீமான் ஈ. வெ ராமசாமி நாயக்கருக்குத்தான் சேர்ந்ததென்றும் நானும் வரதராஜுலு நாயுடுவும் இரண்டு மூன்று வாரங்களாகவே விட்டுக்கொடுக்கும்படி நாயக்கரை கேட்டு வந்ததற்கு இசைந்து விட்டுக் கொடுத்ததற்காக எனது மனமார்ந்த வந்தனமென்றும் இந்த ஒற்றுமை இப்படியே இருந்து ஒழுங்கான துறைகளில் வேலை செய்து வெற்றி பெற வேண்டுமென்றும் பேசினர்.

ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரை எல்லோரும் சில வார்த்தை சொல்லும்படி கேள்க்க அவரும் எழுந்து தன்னேடுகூட காங்கிரசில உழைத்துவந்த கனவான்களை இன்று இந்த மேடையில் பார்க்க தனக்கு அதிக மகிழ்ச்சியாக இருப்பதாகவும் தான் ஒரு காலத்திலாவது தலைவனுயிருந்ததே கிடையாது என்றும தனக்கு தலைவன் யோக்கியதையே கிடையாது எனறும தான் பொது வாழ்வில் தொண்டனுகவே நுழைந்து முதல் முதல் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவிடம் சிஷ்யனுக இருந்ததாகவும் பிறகு ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியாருக்கும் சிஷ்யனுக இருந்ததாகவும் அவர்களோடு சில சமயங்களில் அபிப்பிராய பேதப்பட்டு கண்டிகக நேர்ந்ததெல்லாம் தனது கொள்கையில் தனக்கு இருந்த பிடிவாத பைத்தியமேகாரணமென்றும் இவர்களும இதில் சேர்ந்து விட்டதால் தலைமைப்பதவியைஏற்றுக்கொண்டு தமமை சரியான வழியில் நடத்தி சுயமரியாதையடைய வழிகாட்டவேண்டுமென்றும் தன்னிடம்இனிசரியானபடி வேலை வாங்கவேண்டிய பொருப்பு இனி அவர்களைச் சேர்ந்ததென்று கேட்டுக் கொள்ளுவதாகவும் காஞ்சீபுரம் மகாநாடுதான் தனக்கு காங்கிரசின் புரட்டுகளை வெளியாக்கிற்றென்றும் அதுமுதலே அதை ஒழிக்கப் பாடுபடுவதாகவும் யார் பாடுபட்டாலும் காங்கிரசை யோக்கியமான இயக்கமாகக முடியாதென்றுதான் உறுதிகொண்டிருப்பதாகவும் சொன்னதுடன் மூவரையும் மனப்பூர்வமாக நல்வரவேற்பதாகவும் பேசி முடித்தார்.

சுரேந்திரநாத்ஆரியா.

ஆரியர் அவர்களும எழுந்து எல்லோருக்கும்வந்தனம்சொல்லி நம்மோடு எல்லோரும கலந்த பெருந்தன்மைக்கு சுவாமிக்கு தேங்காய் உடைப்பதாகச் சொன்னர். ஸ்ரீமான் எ. ராமசாமி முதலியாரும் எழுந்து சந்தோஷப்படுவதாகவும் ஒவ்வொரு மகாநாட்டிலும் எல்லாபார்ப்பனரல்லாதாரையும் வரும்படி அழைத்ததாகவும் அதுபோலவே இம்மகாநாட்டிலும் அழைத்த அழைப்பை ஏற்றுக்கொண்டதற்கு வந்தனமளிப்பதாகவும், எல்லோருக்கும் இருப்தியான தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது கல்ல சகுனமென்றும் காங்கிரசின் மூலமாய் பார்ப்பனர்கள் செய்கிற அக்கிரமங்களை ஒழிக்கத்தான் காங்கிரசுக்கு போறதும் போகவேனே அல்லாமல் வேறு தனக்கு அங்கு பிரமாதமாய் வேலை இருப்பதாய் நினைக்கவில்லை என்றும் அதுவும உங்கள் அநுமதியுடன்தான் போவேன் என்றும் விட்டுக் கொடுத்ததற்காக நாயக்கருக்கு நன்றி செலுத்துவதாகவும் சொன்னர்.

இந்நடவடிக்கைகள் முடிந்ததும் என்று மில்லா மகிழ்ச்சியுடன் மகா நாட்டிலுள்ள சகல தலைவர்களுள்பட சுமார் பதினயிரக் கணக்கான ஜனங்கள் பின்தொடர ஓர் பிரம்மாண்டமான ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாக திருவாளர் இரத்தினசபாபதி முதலியார் வீட்டை அடைந்தது. சகலதலைவர்களும் அழகி புஷ்பஹாரங்களிடப்பட்டு சகல மஹா ஜனங்களும சிற்றுண்டியும் தாம்பூலமும் வழங்கப்பட்டார்கள்.

(ஏனைய நடவடிக்கைகள் அடுத்தவாரம்)

14-ம் பக்கம் தொடர்ச்சி

8 "பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்துடன் மாகாண சுயாட்சி அவசியம் நமக்கு வேண்டும்.

9 (அ) சென்னை மாகாணத்தில் இருக்கும் படியான தொழிலாளர்கள் பார்ப்பனரல்லாதாராய் இருப்பதால் அவர்களின் நன்மையின் பொருட்டும், அவர்களுக்கு உதவி செய்யவும் ஓர் பத்திரிகை ஆரம்பிக்கவேண்டும் என்றும், அதற்குத் தகுந்த பொருள் உதவிசெய்யவேண்டும் என்றும் இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது."

(ஆ) "சென்னை மகாண ஜனசமூகத்தில் தொழிலாளர்களே பெரும்பாலோராய் இருப்பதால், அவர்கட்கு சட்ட சபையிலும் ஸ்தல ஸ்தாபனங்களிலும், தொழிலாளர்களை நியமிக்கவேண்டும் என்றும் இம் மகா நாடு கேட்டுக்கொள்ளுகிறது."

(இ) "ஸ்தல ஸ்தாபனங்களுக்கு தேர்தலில் நிற்கும் தொழிலாளர்களை போட்டியின்றி ஆதரிக்க வேண்டும் என்றும். இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது."

(ஈ) "தொழிலாளர்களுக்கு தொழிற்சாலைகள் ஏற்படுத்தி, அவர்களுக்கு 'இலவசக்கல்வி அளிக்கப்படவேண்டுமென்றும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது."

(உ) "தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் ஏற்படும் பிணக்கை சமரசமாய்த் தீர்க்க உத்தியோகபற்றற்ற நியாயஸ்தாபன போர்டு ஒன்று நியமிக்கவேண்டுமென இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது."

10. கோயமுத்தூர், திருச்சிறப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம், சேலம் ஆகிய ஜில்லாக்களை ஒன்றுசேர்த்து, முன் வழக்கம்போல் பருத்தி வியாபாரம் போக்குவரத்துக்கு அனுமதிக்கவேண்டுமாய் கவர்ன்மெண்டாரை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

12. இம் மகாநாடு பிராமணரல்லாத சமூகத்தார் அனைவரும் அந்நிய நாட்டுத் துணியை அறவே ஒழித்து நம்மக்களால் நூற்று நெய்யப்பட்டுள்ள கதர் துணியை உடுக்க வேண்டுமென்றும் பட்டினிகிடந்து வருந்தும் லக்ஷக்கணக்கான ஏழைகள் தங்கள் ஓய்வு நேரங்களில் ராட்டினத்தில் நூற்கும் வேலைக்குப் பார்பனரல்லாதார் தங்களுடைய அநுதாபத்தைக் காட்டவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறது.

13. நாட்டின் ஜீவாதாரமான கைத்தொழிலை விருத்திசெய்யவும் நிரந்தரமான வறுமையைப் போக்கவும், ஏழை மக்களைக் காப்பாற்றவும், கை ராட்டனத்தால் நூல் நூற்று கைத்தறியினுல் நெய்யப்பட்ட கதர் வஸ்திரத்தை ஒவ்வொருவரும் அணிவதே முக்கியமான மார்க்கமானதால் ஒவ்வொருவரும் கதரையே உடுத்தவேண்டுமென்று இம்மகா நாடு வற்புறுத்துகிறது.

குறைந்த விலையில் மிகச் சிறந்த ஸில்க்!

அமெரிக்கன் ஸில்க்

தூய்ய வெள்ளை, திக்கான பட்டு, தினசரி சலவை செய்யலாம். 5 முழ நீளம் x 40 இஞ்சி அகலமுள்ளது.
நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதம்.

கே. எஸ். முத்தையா கம்பெனி, தபாற் பெட்டி 99, சென்னை.

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

களை நாம் கேட்கிறோம். பார்ப்பனீயத்தை எதிர்த்த புத்தர் வள்ளுவர், காலத்திலிருந்து இன்றுவரையில் ஒவ்வொரு நிறம்படைத்த கூட்டத்தையும் சிதறடிக்க பார்ப்பனர்கள் எத்தகைய இழிவு முறையும் கையாள பின்வாங்கவில்லை. அதன் பயனாகவே இன்றுவரை உயிர் வாழ்கின்றார்கள், அவர்களின் சூழ்ச்சியானது இப்பத்து வருடங்களில் மூன்றுமுறை நம்மை தாக்கியது. முன்னிருமுறை தவரிவிட்டோம். இன்று என்ன செய்யப்போகிறோமென்பதை எடுத்துக் காட்ட முடியாது என்றாலும் நமக்கு "சுயமரியாதை" இருந்தால், நமது கட்சித் தலைவர்களையும், காங்கிரஸ் பார்ப்பனால்லாதார் தலைவர்களையும் மிக மோசமாய் தாக்கிப்பேசின சிலரிடம்நாம்சரண்புகுவதா? எதிர்த்து வெற்றியுற முடியுமா? என்பதைதலைவர்கள் யோசித்து முடிவு செய்வார்களாக.

தலைவர்களின் புத்திமதிகள்

"படித்த வகுப்பின் மனதை திருப்தி செய்யும் வன்மையை எனக்கு கடவுள் அளிக்கவில்லை" என்று கண்ணீர் விட்டு உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தி அடிகளும் காங்கிரசினின்று விலகினர். இன்றைய ஐயங்கார்களின் செக்கஜாலங்கள் நம் தலைவர்கட்கு தெரியாததல்ல இதில் நாம் சொல்லவேண்டியததிகமில்லை. தேர்தலுக்குபின்பு நமது திரு ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் தமது தோல்வி நமது இயக்கத்தின் புனருத்தாரணத்திற்காக உபயோகப்படுத்த கிருமம் கிருமமாய் சென்று பாமர மக்களை தட்டி :எழுப்பப்போவதாய் கூறினர்கள். ஆனால் இன்று அவர்களின் போக்கு காங்கிரசையே கருதுகிறது. நம்மால் பேரிதும் மதிக்கப்பட்டுள்ள திரு ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் அவர்களும், டாக்டர் பி வரதராஜுலு நாயுடு அவர்களும், திரு வி. கலியாணசுந்திர முதலியார் அவர்களும் நாம் காங்கிரசை கைவசப்படுத்தவேண்டுமென்கிறார்கள். நாமும் அவர்களை வணக்கமாய் கேட்பதாவது. இரண்டு வேண்டாம் ஒன்றோடு நிற்போம், அந்த ஒன்று காங்கிரசா, ஜஸ்டிஷ் இயக்கமா? என்பதேயாகும். அவர்கள் நம்மீது பட்சங்காட்டி நமது தலைவர்களில் சிலருக்கும் துணைபுரிந்ததற்கு வந்தனமளிக்கிறோம். ஆனால் நீங்கள் மூவரும முதலில் எங்களுடன் சேருங்கள். எந்த அம்சம் எங்கள் திட்டத்தைவிட காங்கிரசில் இருக்கிறது. காங்கிரஸ் பிரவேசமே நமக்கு சமுதாய முற்போக்கையும கொடுத்துவிடுமென்பதை தாங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா என்றும்கேழ்க்கிறோம. நமதுகட்சியின் தலைவரோ இரண்டில் எதையும சொல்ல மருத்துவிட்டார்கள். நமது கட்சியின் தூண்கள் போன்ற திருவாளர்களான டாக்டர் நடேச முதலியார் அவர்களோ நாம் காங்கிரசில் பிரவேசமாவது கடலானது நதியுடன் சேரவேண்டும் என்பது போல் இருக்கிறது என்றார். திரு சௌந்திரபாண்டிய நாடார் எம். எல். சி. சொல்லுவதாவது நமக்கு நல்ல சமையத்தில் உதவிபுரிந்த பெரியாரான திரு. நாயக்கரின் புத்தியைக் கேட்டால்தான் இதுவரை உலகில் நிமிர்ந்து நிற்கிறோம். இக்காலத்தில் அவர் ஒருவரே அநுபவ பூர்வமான தலைவர்: அவரின் பிரிவு நமது கட்சிக்கு மகத்தான நஷ்டமாகும் என்கிறார். திரு பி.டி. ராஜன் எம். எல்.சி. சொல்லுவதாவது:–எந்தஒருதிட்டத்தையாவது நாம் அமுலில்நடத்தவில்லை. என்னநேர்ந்ததற்காக காங்கிரசில்சேரவேண்டும். அந்த துர் அதிர்ஷ்டமான சம்பவம் நமக்கு வேண்டாம்- கட்சி என்பது ஒரு விளையாட்டாகவும் வர்த்தகமாகவும் இருக்கிறது. மோசமான மாறுதல் யேற்பட்டால் அதில் ஒரு நிமிடமும் இருக்கமுடியாமைக்கு வருந்துகிறேன்என்கிறார். சர் கே.வி.ரெட்டிநாயுடு சொல்லுவதாவது:– நமது இயக்கம் தோன்றிய இடத்திலேயே அழியப் போவதென்பதுவிசனிக்கத்தக்கது. அதற்கு கூட்டமும் வேண்டுமா? நமது தலைவர்களின் லெட்சியங்களையும் இம்மாய்கையில். நமதியக்கத்திற்கு மீண்டும் தோன்றியுள்ள பெரும் அதிர்ச்சியும். பிளவும் எவ்வளவுதூரம் பாதகப்படும் என்பதும் நம்மைவிட நமது தலைவர்களே அதிகமாரியும் ஆற்றல் பெற்றவர்கள் என்பதை அநுஷ்டான முறையில் காட்ட தவறுதிருப்பார்களாக.

நம்பிக்கை மோசமல்லவா.

நமது மகாணத்தில் நமதியக்கம் தோன்றிய பின்பே மற்ற மாகாணத்தாரும் நம்முடன் ஒத்துழைக்க முன் வந்தார்கள் அதனால், அவர்கள் அடைந்த கஷ்ட நஷ்டங்கள் மகத்தானதாகும். அவர்களை இதைப் பற்றி நமது தலைவர்கள் ஏதேனும் அபிப்பிராயம் கேட்டார்களா? அவர்கள் இதற்கு ஆதாரம் அளித்தார்களா? அவர்களின் கூட்டுறவில்லாவிட்டால் அக்காலத்தில் நமது இயக்கம் அகில இந்திய இயக்கமாக இருக்க முடியுமா? அவர்களின் நம்பிக்கைக்கு நாம் பாத்திரமாகாவிட்டால் நாளை நமது தலைவர்கள் காங்கிரஸ்காரர்களாகி அங்கு சென்றால் அத்தலைவர்கள் இவர்களை நம்ப முடியுமா? காங்கிரஸ் பிரவேசமென்பது இன்பச்சோலையை விட்டுவிட்டு பாலைவனத்தில் குடியேறுவதையொக்கும். ஓர் சிறு மையிலை ஐயங்காருக்கு ஒரு அகில இந்திய ஸ்தாபனத்தை சிருஷ்டிக்க சக்தி இருக்கும பொழுது நாமும் ஏன் நமது பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை அகில இந்திய இயக்கமாகக்கூடாது. அதற்குத்தக்க வன்மையில்லையா? அன்றி ஆதரவு இல்லையா? மனம் தான் இல்லை.

இராயல் கமிஷன்.

காங்கிரஸ் பிரவேசக்காரர்கள் அடுத்தாற்போல் சொல்வது "இராயல் கமிஷன்" என்பதாகும். இராயல் கமிஷன் வந்தால் என்ன. நமது கட்சியின் பெயரால் சாட்சியம் கொடுத்தால் அதில் பலன் இல்லாமலா போகும். சென்ற லார்டு செமஸ் போர்டு சீர்திருத்த காலத்தில் நமது சாட்சியம் பலன் அளித்ததா, இல்லையா அக்காலத்தில் நாம காங்கிரசில் சேர்ந்தா சாட்சி கொடுத்தோம்? வரும் கமிஷனுக்குக்கூட நாட்டில் பெரும் கொதிப்பும் பொறுப்பும் உள்ள கூட்டம் யாரென்பது தெரியாமலா போகுமா? அத்தகைய ஒரு கமிஷனிடம் எந்த நன்மையை எதிர்பாக்க முடியும். நமது செல்வாக்கை உணராத கமிஷன் நம்மை விசாரிப்பதும் விசாரிக்காமல் இருப்பதும் ஒன்றல்லவா? இங்கிலாந்திலிருந்து வந்த ஒரு கனவான் தனது சாட்சிக்கு நம் தலைவர் நாயர் பெருமானை தேடி ஓடவில்லையா? அவர் அடிச்சுவடைப் பின்பற்றும் நாமோ கமிஷன் வரவிற்காக காங்கிரசில் சேரவேண்டுமென்பதும் அப்படியே சோ அனுமதியளித்தாலும் உங்களை ஐயங்கார்கள் சேர்த்துக்கொள்ளப் போகின்றார்களா? வங்காளத்திலும் மஹாராஷ்டிரத்திலும் போட்டி கமிட்டிகளின் சண்டை இன்னமும் தீரவில்லை. உங்கள் எண்ணப்படி நீங்கள் போனாலும் இரண்டும் கெட்டு திண்டாடும் நிலைதான் நமக்கு யேற்படும்.

முடிவுரை.

சகோதர பிரதிநிதிகளே!

உங்களரிய நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. காங்கிரஸ் பிரவேசம் என்ற ஒரு மாய்கையில் நமது கட்சியார்கள் சிக்கமாட்டார்களென்பது நமக்கு நன்றாக தெரியும், அந்த பிரமைகொண்ட சிலரின் எண்ணம் ஒரு கலக்கத்தை கொடுத்துவிட்டது. இதுவரையில் புரோகித பகிஷ்காரத்திலும், ஏனைய சுயமரியாதை இயக்கத்திலும் நாம் முன்னேற்றமடைந்து வருகிறோம். அடுத்த ஆறு மாதத்திற்குள் நமது மாகாணத்தை பொறுத்தவரையில் கட்டுப்பாடான தொண்டாற்றத்தக்க முயற்சிகளை நமது மகாநாடு தீர்மானிக்கக்கூடும். நாம் எதிர்காலத்தில் இன்னம் அதிகதொண்டாற்றுவோம் என்ற நம்பிக்கையுடன கூடியுள்ள இளைஞர்களே! உங்களை மீண்டும்மொருமுறை நல்வரவு கூறிநல்வரவேற்கின்றேன் இன்றைய நமதிளைஞர் மகாநாட்டுக்கு பிரபல தலைவரான பெரியார் திரு. D. A. G. இரத்தினம் B. A., L L. B. அவர்களை தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்

தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் திரு ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் மருதினம் தலைமைவகித்தார்.

முக்கிய தீர்மானங்கள்.

(1) சென்னை ஸ்ரீமதி அலர்மேலு மங்கத்தாயாரம்மாள் கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாக நியமிக்கப்பட்டதை இம்மகா நாடு பாராட்டுகிறது.

2) ஜஸ்டிஸ் கட்சிக்கு காரண பூதர்களாய் விளங்கிய, டாக்டர் டி. எம். நாயர், சர். பி. தியாகராஜ செட்டியார் முதலியவர்களின் படங்களை ஒவ்வொரு பிராம்மணரல்லாதார் வீடுகளிலும் தொங்கவிடவேண்டும் என்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது

(3) "ஜஸ்டிஸ்" "திராவிடன்" "தமிழ்நாடு" "நவ சக்தி" "குடி அரசு" முதலிய பத்திரிகைகளை ஆதரிக்கவேண்டும் என்று இம் மகா நாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(4) ஸ்தல ஸ்தாபனங்களில் ஏற்படும் வேலைகளுக்கு எல்லாம பிராம்மணரல்லாத சகோதரர்களையே நியமிக்கவேண்டும்என்று இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(5) எல்லா பிராம்மணரல்லாத வாலிபர்களும் தேகப்பயிற்சியில் ஈடுபட்டு, பலசாலிகளாக விளங்கவேண்டும் என்று இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

கோவை மகாநாட்டின் தீர்மானங்கள்.

இதர கட்சியார்க்கு ஆதரவு

1. "பலவித அபிப்பிராயபேதமுள்ள பிராமணரல்லாதார் எல்லாருள்ளும் ஒற்றுமையை அதிகப்படுத்த வேண்டுவது மிக்க அவசியமாதலாலும், துரிதத்தில் சுயராஜ்மடைவதற்காக இந்தியாவிலுள்ள பலவித ராஜீயக் கட்சிகளுக்கும் ஒற்றுமையை அதிகப்படுத்துவதற்கான முறைகளைக் கையாளவேண்டியிருப்பதாலும், காங்கிரஸை ஒரு தனிவகுப்பார் ஆதிக்கத்துக்குள் கொண்டுவந்துவிட்ட சில சுயநலப் பிரியர்கள் பிராமணரல்லாதாரியக்கத்தின் நோக்கங்களையும் கொள்கைகளையும் திரித்து மாற்றிப் பொய்ப் பிரசாரம் செய்து வருவதினாலும், அப்படிப்பட்ட பொய்ப்புரட்டுகளையும் விஷமப் பிரசாரத்தையும் மறுக்க வேண்டியது அவசியமாயிருப்பதினாலும், அதுவுமன்றி பிராமணரல்லாதார் இயக்கத்தின் நோக்கங்களையும் கொள்கைகளையும் சரியாய் விவரித்துக் கூறி ஜனங்களுக்குள் பிரசாரம் செய்ய வேண்டியிருப்பதினாலும், இந்த மகாநாடு பிராமணரல்லாதார் எல்லாரும் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தில் சேரவேண்டுமென்று வற்புறுத்தி வேண்டிக் கொள்வதுடன், காங்கிரசிலும் அது போன்ற சங்கங்களிலும் சேரப்பிரியமுள்ள தென் இந்திய நல உரிமைச்சங்கத்தின் அங்கத்தினர் அப்படிச் செய்யலாமென்றும் அனுமதிக்கொடுக்கிறது.

தென் இந்திய நல உரிமைச்சங்கம் தனிச் சங்கமாய் நின்று தன்னுருக் குலையாமல் வேலை செய்யவேண்டுமென்றும் இந்த மகாநாடு தீர்மானிக்கிறது."

இரட்டை ஆட்சியை மீண்டும் எதிர்த்தல்.

2. ஜஸ்டிஸ் கட்சியார் இந்த மகாணத்தில் இரட்டையாட்சியை ஆறுவருட காலம் நடத்திப்பார்த்ததில் மந்திரிமார் அறிக்கையில் கூறியபடி இரட்டை ஆட்சி மிகவும் கஷ்டமான முறை என்று அறிந்திருப்பதாலும் மாற்றப்பட்ட இலாக்காக்களில் அனுசரிக்கப்படும் நோக்கம் முறைகளுக்கு தனி சர்க்கார் இலாக்காக்களில் எந்தப் பகுதியாகவது எதிரிடையாயிருந்தால் இரட்டையாட்சியை நடத்துவது முடியாதென்று கண்டிருப்பதாலும், அதுவுமன்றி இந்த இரட்டை ஆட்சி முறையால் சட்ட சபையில் மெஜாரிட்டி பலமில்லாத ஒரு பினாமி மந்திரிசபை ஏற்பட்டு, அதன் சிறுமை முறைகளால் ஸ்தலசுய ஆட்சி மிகவும் கேவலப்பட்டுப்போனதாலும், இந்த மகா நாடு சென்னை சட்டசபையில் ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினரின் நடத்தை சரியென்று ஒப்புக் கொள்வதுடன், மகாண சுய ஆட்சி இந்த மகாணத்துக்குக் கொடுக்கப்படுகிற வரையில் ஜஸ்டிஸ் கட்சியார் உத்தியோகம் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்றும் தீர்மானிக்கிறது.

கவர்னரிடம் நம்பிக்கையில்லை.

3. எதிரிக்கட்சியென்று வெளிக்கு காட்டிக் கொள்ளுகிற ஒரு கட்சியுடன் சிறுமை ஒப்பந்தம் செய்துகொண்டு அந்த ஒப்பந்த பலத்தால் உத்தியோகம் வகித்து வருகிற ஒரு மந்திரி சபையார் அந்த எதிர் கட்சியின் ஆதரவுக்காக ஸ்தல சுய ஆட்சி இலாக்காவில் செய்துவரும் நெறியற்ற ஒழுங்கீனமான வேலைகளுக்கும் நியமன அதிகாரத்தை தவறாய் உபயோகித்து ஸ்தல சுய ஆட்சியையே சீர்குலைத்துக் கேவலப்படுத்தி வதிவதற்கும் இடங்கொடுப்பதாலும் நிர்வாக சபை அங்கத்தினர் ஒருவர் தமது அதிகாரத்தையும், உத்தியோகத்தையும் தவறாய் உபயோகிப்பது சர்க்கார் உத்தியோகங்களில் ஏற்கனவே அதிக ஸ்தானம் பெற்றிருக்கிற ஒரு வகுப்பாருக்கே பின்னும் உயர்ந்த உத்தியோகங்கள் கொடுத்து அந்த வகுப்பாரின் சுயநலத்தை அதிகரிப்பதற்கு இடம் கொடுத்திருப்பதால் மேன்மை தங்கிய கவர்னர் இந்த மகாண ஜனங்களின் ஆதரவையிழந்து விட்டதாலும் மேன்மை தங்கிய கவர்னர் இந்த மகாணத்தை நியாயமாவும், பட்சபாத மில்லாமலும் ஆளுகை செய்கிறவரென்று பொது ஜனங்கள் நம்புவதற்குரிய உரிமையை இழந்து வருகிறாரென்று இந்த மகாநாடு தீர்மானிக்கிறது

4. "பண நெருக்கடியான இச் சமயத்தில், பைக்காரா திட்டம், மேட்டூர் திட்டம், தூத்துக்குடி துறைமுக திட்டம், முதலிய திட்டங்களுக்காக பணம் அதிகம் செலவழிக்க வேண்டியிருப்பதாலும், இத் திட்டங்களால் ஜனங்களுக்கு எவ்வளவு அனுகூலம் ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாததாகையாலும், வரி கொடுப்போருக்கு அதனால் மிகவும் கஷ்டம் ஏற்படுவதாலும், ஜனங்களுடைய உரிமைகள் சரியாக பாதுகாக்கப் படவில்லையாகையாலும், இந்திய கவர்ன்மெண்டாரும், இந்தியா மந்திரியும் இத் திட்டங்களைப்பற்றி விசாரிக்க ஓர் கமிஷன் ஏற்படுத்தி பாரபக்ஷமில்லாமல் விசாரிக்கவேண்டும் என்றும், அப்பேர்க்கொத்த கமிஷன் விசாரணை செய்து ஓர் முடிவுக்கு வரும் வரை மேற்படி திட்டங்கள சம்மந்தமாக நடத்தப்படும் வேலைகளை நிறுத்திவைக்க வேண்டும் என்றும் இம் மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது."

5. பார்ப்பனரல்லாத இந்துக்கள் என்போர்களது மத சம்பந்தமான சுபா அசுப சடங்குகளுக்கு தங்களைவிட பிறவியல் உயர்ந்த வகுப்பார் என்கிற எண்ணத்தின் பேரில் வேறு வகுப்பாரைக் கொண்டு செய்துகொள்வதில் நாமே நம்மைத் தாழ்ந்த வகுப்பார் என்று ஒப்புக்கொள்வதாக இருப்பதாலும் இவ்வித மனப்பான்மையே நமது சுயமரியாதையை அழிப்பதற்கு ஆதாரமாயிருப்பதாலும இனி இவ்வழக்கத்தை அடியோடு ஒழிக்கவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

6- பார்ப்பனரல்லாதாருக்குள் ஜாதி வித்தியாசம், தீண்டாமை நீக்குதல், தாமே ஆலய வழிபாடு செய்தல், சுயமரியாதையுடன் நமது சுபாசுப காரியங்களை நடத்துதல் நம்மவரையே பல தொழிலிலும் ஆதரித்தல் முதலியவைகளைப் போன்ற கட்டுப்பாட்டை எல்லா துறைகளிலும் நடவடிக்கையில் கையாளவேண்டுமென இம்மகாநாடு வற்புறுத்துகிறது,

(4ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரசும் நமது கட்சியும்.

காங்கிரசில் சேர்ந்து கொள்ளுவதால் நாம் நமது பூர்வ கொள்கைக்கும் நடத்தைக்கும் தற்போதிய கொள்கைக்கும் முரணாக நடந்துகொள்ளுவதாகக் கருதவேண்டியதில்லை, காங்கிரசைச் சார்ந்த சிலரது நடத்தை எப்படியிருந்தாலும் அம் மகாநாட்டின் கொள்கைக்கும் நமது கட்சியின் கொள்கைக்கும் எவ்வித மாறுபாடும் இல்லையென்பது திண்ணம். சமாதானமாகவும் நியாய வழியாகவும் சுயராச்சியத்தை யடைவதே இவ்விரு கட்சிகளின் முதன்மையான கொள்கையாகும். வகுப்புவாரி தருமமும் ஜாதிமத வித்தியாசமின்றி, அனைவரும் சமவசதியும் அளிக்கவேண்டுமென்ற தத்துவத்தை இதர வகுப்பினரைப் பொருத்திய வரையில் காங்கிரஸ் சபை ஒப்புக் கொண்டிருக்கிறது. காங்கிரசைச் சேர்ந்த நம் மகாணத்தின் ஒரு வகுப்பினரின் வகுப்பு மமதையும் அயோக்கியத்தனமும் பிடிவாத குணமும் எப்படியிருந்தாலும் நமக்கு இறுதியில் நியாயமும் இஷ்ட பூர்த்தியும் சித்திக்குமென திண்ணமாய் நம்புகிறேன்.

நமது சுய நிலைமையை வகித்திருப்போம்.

நாம் தற்போதிருக்கும் நிலைமையானது காங்கிரசானது சென்னையில் ஒரு சிறு வகுப்பினரின் கையில் இருப்பது உண்மையே. ஆனால் இந் நிலைமையிலிருப்பதற்கு நமது குற்றமும் ஒரு காரணமாயிருப்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும் அதற்குச் சிகிச்சையும் நம் கையில் இருக்கிறது. சில நண்பர்கள், நாம் காங்கிரசில் சேர்ந்தால் நமது சுயநிலைமையை யிருந்து நமது இயக்கமும் இழிவடையுமென்று பயப்படுகின்றார்கள். என் இப்படி யாகவேண்டுமென்று எனக்குப் புலப்படவில்லை, ஹிந்து மகா சபையிலும் அகில இந்திய மகமதிய சபையிலும் உள்ள அநேக தலைவர்கள் தூண்டா விளக்காய் காங்கிரசில் பிரகாசிப்பதைப்போலவே நாமும் நமது லட்சக்கணக்கான பார்ப்பனரல்லாத சகோதரர்களின் மேம்பட்டுக்காக தனிப்படையாயிருந்து காங்கிரசில் வேலை செய்யக்கூடும். நமது நிலைமை இப்பொழுதிருப்பதைக் காட்டிலும் இன்னும் பலமாக இருக்கும். எப்படி யென்றால் யுகாந்திரமாக தூங்கிக்கொண்டிருக்கும் நம் சகோதரர்களைத் தட்டி யெழுப்பி சேர்ந்து இது காறும் வேறாகத் தூர நின்றுகொண்டிருந்த பார்ப்பனரல்லாத நண்பர்களை நம்மோடு கலந்து உழைக்கக் கூட்பிட ஹேதுவாயிருக்கும். எனது விண்ணப்பம் வீண் போகாது என்று நம்புகிறேன்.

முடிவுரை.

வெகு சீக்கிரத்தில் ராயல் கமிஷன் நம்மிடையில் வந்துவிடும் இவ்வளவுகாலம் மறுக்கப்பட்ட சுயாராஜ்ய வரத்தைப் பிடுங்கிக் கொள்ளுவதற்கு நம் தேசமுழுதும் ஏற்பட்டிருக்கும் இந்தப்பாரத யுத்தத்தில் நமது சேனை மாத்திரம் தனித்து நின்றுவிட்டதென்று சரித்திராசிரியர்கள் எழுதாதொழிக! உத்தியோக ஆதிக்கத்துக்கு நடுங்காமலும், கவுரவத்தைக் கவனிக்காமலும், பார்ப்பனின் சூழ்ச்சிக்கு ஈடுபடாமலும் நமது கொள்கையிற் ஞான நம்பிக்கையுடன் தேசிக சேனையின் முன் அணியில் நின்று நமது ஜன சமூக ராஜீய சுவாதந்திரியத்தை நாடிச்செல்வோம்.

---

7. நாட்டுப் புறங்களை ஏறகனவே உள்ளபடி செய்வதர்க்காகக் கூட்டுறவுச் சங்க இயககத்தார் பார்ப்பனரல்லாத சங்கங்களும் தலைவர்களும் மிக்க ஊக்கம் எடுத்துக்கொண்டு கிராமங்களில் ஐக்கிய நாணயச் சங்கம் ஸ்தாபிக்கவேண்டுமென்று இம் மகாநாடு கருதுகிறது. (மேலைய தீர்மானங்களை 12ம் பக்கம் பார்க்க]

பழநி சி. எம். சாமி

குருதாம்பரபஸ்பம்

சகல வியாதிகளுக்கும் கைகண்டது.

திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து மேகம், தடிப்புகள், மாறி விட்டது ஆராத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல் குன்மம், வெள்ளை, வெட்டை பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்லா வியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம் நற்சாட்சிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

50 நாள் 100 வேளைபஸ்பமும் அனுப்பானமும் விலை ரூ. 50 25 நாள் 50 வேளை பஸ்பமும் அனுப்பானமும்விலை ரூ. 25. ஏழைகளுக்குப்பாதிவிலை

இனமாய் குருதாம்பரபஸ்பம் மாதிரி பாக்கெட் விரும்புவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்

நற்சாட்சி:—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ண குணம. போற்றுவதை கவனியுங்கள்.

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது மேகவியாதியால் ஒன்னரை வருஷகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூர்ணகுணமானான் மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானான் ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

A. M. துரைசாமி, 80-நீர் மார்க்கம் ரோடு, சூளை பெங்களூர் 11—4—27

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுர்வேத வைத்திய ஆசிரியர்,

மலையப்பசாமி.

நித்தியானந்த வைத்தியசாலை
பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத்தெரு ஜி. டி. சென்னை

Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு 3½"x 2½" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லாசாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents
ஸ்ரீதனம் அண்டு கம்பெனி.
பிருமம சமாஜம், ஜி. டி. மதராஸ்

கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணனஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும. உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

"அதிவேகு. ஆச்சரியம்" என்னும்

ஆரூடம்,

கைகண்ட பலன்! தகுந்த விடைகள். தகுந்த விடைகள்! எதிர் கால பலன் கேள்விகள் 6-க்கு ரூபாய் ஒன்று மேற் கொண்டு கேள்வி 1-க்கு அணா நான்கு தபால் செலவு வேறு இன்னும் வேறுவிஷயங்களுக்கும் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். அன்னிய நாட்டு வாசிகள் முன் பணம் தபால் செலவுடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

வி. எஸ். அய்யர்
சுப்ரமணிய உபாசி
பழனி P. O. (S. I.)

உங்களுக்கு ஓர் நற் சகுனம்

ஜோதிடம்

தர்ம நியாயமான 6 கேள்விகளுக்கு ரூபாய் ஒன்று பிரதி ஒவ்வொரு கேள்விகளுக்கு 0-4-0 ஒரு வருஷத்துக்கு பலன் ரூ 5-0-0 ஆயுள்வரை பலன் ரூ 50.

ஸ்ரீசிவ சுப்ரமண்ய சர்வ ஜயவசீகாணி கவசம் கைமேல் பலன். இராஜாக்களின் அபிமானம் புருஷனிடம் அன்பில்லாத மனைவி, மனைவியிடம் அன்பில்லாத புருஷவசியம் குடும்பங்களில் ஏற்படும் கலகங்களின் நிவர்த்தி பக்தி விசுவாசம்

இக்கவசம் மிக்க கியாதி பெற்றது பக்தி விசுவாசம், சரித்திரம் முதலியது அணுகாது.

வெள்ளி கவசம் ரூ. 2-8-0 சாதா கவசம் ரூ. 1.
தபால் வேறு.

மானேஜர்,
ஸ்ரீசிவ சுப்பிரமணிய சோதிட கவச நிலயம்
திருத்தணி சித்தூர் ஜில்லா

சந்தா நேயர்களுக்கோர் அறிவிப்பு

நாம் இதுவரை வெளியூர்களில் சந்தா பணம் வசூலிக்கவாவது, விளம்பரப்பணம் வசூலிக்கவாவது ஒரு ஏஜண்டுக்காவது அதிகாரம் கொடுக்கவில்லை. இப்படி இருக்க "குடி அரசி"ன் பெயரைச் சொல்லி சந்தா சேர்ப்பதாக நேயர்களிடமிருந்து பணம் வசூலித்து விடுகிறார்களென்று கேள்விப்படுகிறோம். ஆகையால் நேயர்கள் யாரிடமாவது பணத்தைக் கொடுத்து விட்டு எமது காரியாலயத்திலிருந்து பத்திரிகையை எதிர்பார்க்க முடியாது. ஆகையால் இவ்வித அசம்பாவிதங்களுக்கு நேயர்கள் ஏமாந்து போகாமல், சந்தாதொகை முதலானதுகளை நேரிலேயே அனுப்பி விடுமாறு வேண்டுகிறோம்.

மானேஜர்
"குடி அரசு", ஈரோடு.

நமது அச்சுக்கூடத்தில்
பலதிறப்பட்ட ஜாப் வேலைகள் அழகாகக் குறித்த காலத்தில் செய்துதரப்படும்

மானேஜர்:—
உண்மை விளக்கப் பிரஸ், ஈரோடு.

மனமறி நூல்

ஒருவர் மனதில் நினைத்ததை இன்னதென்று தெளிவாய்க்கூறும் அருமையான ஆரூட சாஸ்திரம். வடமொழி நூலை ஆதாரமாகவுடையது.

விலை ரூபாய் ஒன்று.

மு. வடிவேல் செட்டி,
110, ஈஸ்பரன் தர்மராஜா கோவில் வீதி
புதுச்சேரி.

1000 கணக்கான வியாபாரிகள், மானவர்கள், குமஸ்தாக்கள் திருப்தியடைந்த உலகப்பிரசித்தி பெற்ற

5 மாத இங்கிலீஷ் கோர்ஸ்

சொற்ப ஆங்கிலம் தெரியாமல் தொழிலில் பெருத்த நஷ்டமடையாதீர்கள் தபால் மூலம் வெகு சுலபமாய் தொழிலுக்கு யாதொரு இடையூறின்றி 1 மாத முதல் 5 மாதத்திற்குள் கற்றுக் கொடுக்கப்படுகிறது. நாகை ரேஞ்சு ஸ்கூல் இன்ஸ்பெக்டர் எழுதுகிறார்:— இங்கிலீஷ் அட்சரங்கள் கூட தெரியாதிருந்தவர்கள் இரண்டு வருஷத்தில் காலேஜ் மாணவர்களுக்கு மேலாக ஆங்கிலத்தில் உபந்நியாசிக்க கற்றுக்கொடுக்கப் பட்டிருந்தனர். சொற்ப கோர்ஸ்கள் தான் ஸ்டாக்கில் இருக்கின்றன. தங்கள் விலாசத்தை உடனே அனுப்பி பிராஸ்பெக்டஸை இனமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பிரின்சிபல் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட் நாகூர்.

தமிழ் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தே. ஆறுமுக செட்டி.
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

சேலம்

சுத்த கதர் ஜவுளிகள்.

கல்யாண காலங்களுக்காக ஸ்பெஷலாய்

பட்டு ஜரிகை பேட்டுகளினால் தயார்செய்த கதர்

நமது சொந்த தறிகளால் தயார் செய்யப்பட்ட நைஸ் நூலினால் பலவிதமான ஜரிகை பேட்டுகளில் தயார்செய்த 54" 4½ 5, 6, 7, 8, 9, 10 முழம் வேஷ்டி தகங்களும் 45 x 5 ஜரிகைப்பேட் பேல் அங்கவஸ்திரங்களும் சேலம் பட்டு குண்டஞ்சு, கரையில் 7, 8, 9 முழம் வேஷ்டிகளும் பலவிதமான கலர்களில் தயார்செய்த 45×9 கெஜம் சில தகங்களும் ஜமக்காளங்களும் கைவசமிருக்கின்றன. விலை ஜாப்தாவுக்கு எழுதவும். அத்தாக்ஷி பத்திரம்.

☞ ஸ்ரீமான் C. V ஜெயகோபாலசெட்டியார் கைநூலால் கைதறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கதர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார். (Sd) S. Ramanathan, காரியதரிசி கதர் இலாக்கா.

C. V. ஜெய கோபால செட்டியார்,

கதர் வியாபாரம், சேலம்



பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலையமாய் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

திருப்பூர்

சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.
S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

மகா ரசகெந்திமெழுகு.

தீராத வெண்குஷ்டம், கருங்குஷ்டம், கிரிமி குஷ்டம், மேகம், ரணம், சூலை முதலிய கொடிய ரோகங்களை 1 மண்டலத்தில் பறக்கடிக்கிறது. 1 மண்டலமருந்து விலை ரூ! 4 வி. பி. வேறு கேட்லாக் இனாம்.

ஆனந்த நிலையம், திருச்செங்கோடு S I.

மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, துரிதஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

ஆனந்த நிலையம், திருச்செங்கோடு (S I.)

டிடக்டாபோன் அல்லது
துப்பறியும் (ரகசியம்) கருவி.



இதன் உபயோகம் யாதெனில் உம்முடைய காதலியையும் அதோடு அவள் செய்யும் காரியங்களையும் அவளுக்குத் தெரியாமலேயே நீர் கண்டுகொள்ளலாம். இதனால் ஏக காலத்தில் உமக்கு முன்னும் பின்னும் நடக்கிற விஷயங்களை நீர் அறிந்து கொள்ளலாம். மேஜுட்டார் கண்டுபிடித்த கருவி இது. பல கலர்களால் தயாரித்த 4 பிரஞ்சு போட்டோ படங்களுடன் இந்தக் கருவியின் விலை ரூ. 2—0—0

"மலாய் நாட்டிலுள்ளவர்களுக்கு கண்டிப்பாய் வி. பி. மூலம் அனுப்பமுடியாது. முன்பணமாவது போஸ்டல் ஆர்டராவது அவர்கள் அனுப்ப வேண்டும்".

பாரிஸ் எம்போரியம், ஜார்ஜ் டவுன், மதராஸ்

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916வரு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மேட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிறு திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேற்சியடைய மூன்று மாதம் ஆகும். தேற்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்.

அல்லது

8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும், எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்பத்திரிகையின வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,

சர்க்கா சங்கம், ஈரோடு

இனாம்! இனாம்!! இனாம்!!!

பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில், பச்சை, புளூ, வயலெட், கருப்பு, செம்பு. ஸ்நப் கலர்கள் கெட்டிச்சாயம். பளப்பளப்பான ஜரிகைத்தோற்றமுள்ளது.

2¾ அகலம் 18 முழம் புடவை ... ரூ. 4—4—0
5 முழம், அசல் பட்டு, குஞ்சம் கட்டின
ஸில்க் அங்க வஸ்திரம் .. ... ரூ 4—8—0
2¾ அகலம் 7½ முழம் அழுத்தமான கை
நெசவு வேஷ்டி ஜோடி ... ... ரூ. 4—6—0

"ஸ்பெஷல்" கேட்லாக் இனாம்!

The Madura Oriental Trading Co.,
Laxmi Cloth Store, MADURA

நல்ல செடிகள்
புதிய விதைகள்

சேலம் ஒட்டு மாஙகன்றுகள் முதல் தரமானவை. பல தினுசுகள் கலந்தது 100க்கு 50 ரூபா கொய்யா 1 மாதுளை, டஜன் 6ரூ. பொமபளிமாஸ், ஆரஞ்சி, எலுமிச்சை டஜன் 9 ரூபா ரோஸ் குரோடன்ஸ் டஜன் 9 ரூபா இங்கிலீஸ் காய்கறி விதைகள், புஷ்ப விதைகள் 20 சாம்பிள் பாக்கெட் 2ரூ. மேற்படி 10 சாம்பில்பாக்கெட் 1-4-0 நாட்டுக் காய்கறி விதைகள் 20 பெரிய பாக்கெட்டுகள் 2-8-0.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரிதோட்டம் சேலம்.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.